# வளம் நிறைந்த வாழ்வு

ஒரு வீட்டின் சொந்தக்காரனானவன், தன் வீட்டின் பின் வளவிலிருந்த, சுத்தமான தண்ணீரைக் கொடுக்கும் துரவை மூடி, அதன்மேல் பன்றிகள் தங்குவதற்கு ஒரு பட்டியை அமைத்துக் கொண் டான். அவன் அந்த துரவை முடியாதால், அவனுடைய வீட்டில் சுரக்கும் சுத்தமான தண்ணீர் ஊற்றுக்களை அடைத்தானே தவிர, அயலவனு டைய வீட்டில் சுரக்கும் ஊற்றுக்களையோ அல்லது ஊரிலு ள்ள ஊற்றுக்களையோ அவனால் அடைக்க முடியாது. ஒருவேளை ஊரி லுள்ள மக்கள் யாவ ரும் ஒன்றுபட்டு தங்கள் வீடுகளிலுள்ள தண்ணீர் ஊற் றுக்களை அடைத்துவிட்டாலும் கூட நிலத்தின் ஆழத்திலிருக்கும் ஊற்றுக் களில் தண்ணீர் சுரக்கும் தன்மையை அவர்களால் அடைக்கவே முடியாது. பிரியமான சகோதர சகோதரிகளே, பண்டிகையின் கடைசிநாளாகிய பிரதான நாளிலே இயேசு நின்று, சத்தமிட்டு: ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து, பானம்ப ண்ணக்கடவன். வேதவாக்கியம் சொல்லுகிறபடி என்னிட த்தில் விசுவா சமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீரு ள்ள நதிகள் ஓடும் என்று நம்முடைய ஆண்டவராகிய இயேசு கூறி யிருக்கின்றார். தம்மை விசுவாசிக்கிறவர்கள் அடையப் போகிற ஆவி யைக்குறித்து இப்படிச் சொன்னார். பிதாவாகிய தேவன் தாமே, மகி மையின் ராஜாவாகிய இயேசுவின் நாமத்திலே பரிசுத்த ஆவியா னவரை நமக்கு அருளியிருக்கின்றார். ஜீவ தண்ணீராகிய ஆவி யான வர் தாமே, நம்மை சகல சத்தியத்திலும் வழிநடத்திச் செல்கின்றார். இன்று பலர் தங்கள் உள்ளத்திலிருந்து ஓடும் ஜீவதண்ணீரை அடை த்துப் போடுகின்றார்கள். அந்த வீட்டுக்காரன், தன் துரவை மூடி பன்றி களின் பட்டியை அமைத்தது போல, வாழ்க்கையை வளம்மிக்க தோட்ட த்தைப் போலாக்கும் ஆவியானவரை விட்டுவிட்டு, தங்கள் வாழ்க்கை யை வறண்ட நிலம் போல மாற்றிவிடுகின்றார்கள். பிரியமான வர்களே, நித்திய ஜீவ வழியிலே நம்மை நடக்க ஆலோசனை கூறும் சத்திய ஆவியானவரின் வழிநடத்துதலுக்கு இடங் கொடுங்கள். உங்கள் இருதயங்களை எல்லாக் காவலோடும் காத்துக் கொள்ளுங்கள். வாழ் நாட்கள் முழுவதும் ஜீவ தண்ணீர் உங்கள் வாழ்வில் நதியாக பாய்ந்து செல்ல இடங் கொடுங்கள் அப்போது எவருமறியாத சந்தோஷம் உங்கள் உள்ளங்களை ஆண்டு கொள்ளும்.

**யோவான் 7:38**

என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும் என்றார்.

**ஜெபம்**: நித்திய வழியிலே நாம் நடக்கும்படி சத்திய ஆவியானவரை நமக்கு அருளிய பிதாவே, நாம் பெற்ற பாக்கியத்தை அற்பமாக எண் ணாதபடிக்கு, நம் வாழ்வை பரிசுத்தமாக காத்துக் கொள்ள கிருபை செய் வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# உணர்வுள்ள ஜீவியம்

**1 தெசலோனிக்கேயர் 5:19**

ஆவியை அவித்துப்போடா திருங்கள்.

ஒரு கிராமத்திலே வாழ்ந்து வந்த நண்பர்கள் வருட முடிவிலே இரவு ஒன்றுகூடலொன்றை ஆயத்தப்படுத்தியிருந்தார்கள். ஒளி வீசும் விளக்குகளை கொழுத்தி, கம்பத்திலே தூக்கிவிட்டு, இரவு முழுவதும், உண்டு,குடித்து,நடனமாடி, உல்லாசமாக இரவை களித்துக் கொண்டிருந்தார்கள். விளக்கின் வெளிச்சத்திலே, பல களியாட்டங்களை நடத்திக் கொண்டிருக்கும் வேளையிலே, விளக்குகளுக்கு எண்ணை ஊற்றி, அதன் திரிகளை சுத்திகரித்து, சிம்மினிகளை சுத்தம் செய்ய மறந்து போனதினாலே, விளக்கிலிருந்த நெருப்பு அணைந்து போய்விட்டது. அவர்களுடைய விளக்குகளிலிருந்து நெருப்பு அவர்களுடைய கவனயீனத்தால் அணைந்து போனதால், அந்த கிராமத்திலுள்ள யாவரின் விளக்குகளிலும் நெருப்பு அவிந்து போய்விட்டது என்பது பொருளல்ல. ஒருவேளை கிராமத்திலுள்ள யாவரின் விளக்கிலுள்ள நெருப்பானது அவர்களுடைய கவனயீனத்தால் அணைந்து போய்விட்டாலும், விளக்கும் நெருப்பும் இல்லாமற்போய்விடுவதில்லை. பிரியமானவர்களே, இந்த உலகிலே பல மனிதர்கள் பரிசுத்த ஆவியானவரைக் குறித்து பல காரியங்களை பேசிக் கொள்கின்றார்கள். அவர்களில் சிலர், இயேசுவை அறிந்திருக்கின்றோம் என்று கூறியும், பரிசுத்த ஆவியானவரின் கிரியைகளை தங்கள் வாழ்வில் அவித்துப் போடுவதால், திரித்துவத்தின் ஒரு நபராகிய பரிசுத்த ஆவியானவர் இல்லாமற் போய்விடமாட்டார். கருப்பொருளாவது, இரட்சிப்பின் நாளுக்கென்று முத்திரையாக பெற்ற ஆவியானவரின் கிரியைகளை சில விசுவாசிகள் தங்கள் வாழ்விலே அவித்துப் போடுகின்றார்கள். அவர் கொடுக்கும் பரிசுத்த வெளிச்சத்திலே, தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவதற்கு பதிலாக, அந்தகார கிரியைகளுக்கு இடங் கொடுத்து, அவர்கள் ஈவாக பெற்ற ஆவியை தங்கள் வாழ்வில் அவித்துப் போடுவதால், உணர்வற்ற கனியற்ற வாழ்க்கையை வாழ தங்களை ஒப்புக் கொடுக்கின்றார்கள். நீங்களோ, முதலாவதாக, உங்களுடைய அழைப்பின் நோக்கத்தை உணர்ந்தவர்களாக, வேதத்தை வாசித்து, தியானியுங்கள். அனுதினமும் ஊக்கமாக ஜெபம் செய்யுங்கள். தெளிந்த புத்தியை கெடுத்துக் கொள்ளாமலும், சுத்த மனசாட்சி உணர்வற்றுப் போகாதபடிக்கு, ஆவியானவரின் ஆலோசனைகளை ஏற்று, சத்தியத்திலே நடக்க கற்றுக் கொள்ளுங்கள். மாம்ச எண்ணங்களுக்கு இடங் கொடுத்து, ஆவியானவரின் கிரியை களை உங்கள் வாழ்வில் அவித்துப் போடாமல், அனல்மூட்டி எரியவிடுங்கள்.

**ஜெபம்:** பரிசுத்த வாழ்வுகென்று என்னை அழைத்த தேவனே, ஆவியை நான் அவித்துப் போடாமல், உணர்வுள்ள ஜீவியம் ஜீவிக்கும்படிக்கு, உம் வார்த்தையின் வழியிலே நடக்க எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# மாறாத அன்பு

ஒரு ஊரிலே வாழ்ந்து வந்த உயர் நீதிமன்ற பிரதம நீதிபதியானவர், துக்க முகத்தோடு இருப்பதை அவருடைய நெடுநாள் நண்பரானவர் அவதானித்துக் கொண்டார். அந்த நண்பரானவர், நீதிபதியை நோக்கி: நண்பனே, நீ துக்க முகத்தோடு இருக்கின்றதற்கு காணரம் என்ன என்று கேட்டார். அதற்கு நீதிபதியானவர்: இந்த தேசத்திலே நான் எந்தக் கல்வி நிலையங்களுக்குச் சென்று அறிவுரைகளை வழங்கும்போது, அங்குள்ள அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள், மிக வாஞ்சையோடு காணப்படுவார்கள். பெரிதான கனத்தோடு, என் அறிவுரைகளை அவர்கள் ஏற்றுக் கொள்வார்கள். ஆனால், என்னுடைய மகனானவனோ, என் சொல்லை கேளாமல், தன் விருப்பப்படி செயற்பட்டு வருகின்றான் என்றார். அதற்கு நண்பனானவன் நீதிபதியை நோக்கி: பிள்ளைகள் பிள்ளைகளைப் போல இருப்பார்கள், உன்னுடைய பிள்ளையானவன் நேர்வழியைவிட்டு அதிக தூரம்செல்லமாட்டான் என்றார். அதற்கு நீதிபதி: நான் பலமுறை ஆலோசனைகளை கூறியிருக்கின்றேன், ஆனால் அவனோ அவைகளை அசட்டை பண்ணி வாழ்கின்றான். அப்பா, அன்புள்ளவர், எனவே அவருக்கு இருக்கும் செல்வா க்கினால் தன்னை எப்படியும் பிரச்சனைகளிலிருந்து காப்பாற்றுவார் என்று அவன் நினைக்கின்றான். போகின்ற போக்கிலே அவன் சில சட்டவிரோதமான செயல்களுக்கும் உடந்தையாகிவிடுவானோ என்று எண்ணுகின்றேன். அதற்கு முன்பாக அவன் வழிகளை நான் சீர்படுத்த வேண்டிய சில நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அது அவன் மனதிற்கு கசப்பாக இருக்கும் ஆனால் அவன் கால்களையோ, அது பொல்லாப்புக்கு விலக்கிக் காக்கும் என்று கூறினார். பிரியமான சகோதர சகோதரிகளே, இன்று சில தேவ பிள்ளைகளும், அந்த நீதிபதியின் மகனானவனைப் போலவே இயேசுவின் அன்பைக் குறித்து தவறான எண்ணங் கொண்டு வாழ்கின்றார்கள். பரிசுத்த வாழ்வு வாழும்படிக்கு நம்மை அழைத்த அன்புள்ள பிதாவாகிய தேவனானவர், பொல்லாப்புக்கு விலகும் ஆலோசனை களை நமக்கு அனதினமும் தம் வார்த்தை வழியாக கொடுக்கின்றார். அதைக் கேளாதவர்களை போல நாம் நடக்கும் போது, நமக்கு எச்சரிப்பை வழங்குகின்றார். தேவ எச்சரிப்பை நாம் அசட்டை செய்து வாழும் போது, நல்ல தகப்பனைப் போல நம்மை கண்டித்து, தண்டித்து, உணர்வுள்ள இருதயம் நம்மில் மறுபடியும் உண்டாகும் வழியை ஏற்படுத்துகின்றார்.

**வெளிப்படுத்தல் 3:19**

**நான் நேசிக்கிறவர்களெவர்களோ அவர்களைக் கடிந்துகொண்டு சிட்சிக்கிறேன்; ஆகையால் நீ ஜாக்கிரதையாயிருந்து, மனந்திரும்பு.**

**ஜெபம்:** நடக்க வேண்டிய வழியை போதிக்கின்ற நல்ல தகப்பனே, நான் உம்முடைய ஆலோசனைகளின் வழிகளைவிட்டு விலகிப் போகாதபடிக்கு எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்து வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# ஆசைகளை நிறைவேற்றுவது அன்பா?

வீட்டிலே, மகிழ்ச்சியான நாட்களிலே குடித்துச் குதுகளித்து சந்தோஷமாக இருக்க வேண்டும். துக்க நாட்களிலே துக்கத்தை மறப்பதற்கு, மதுபோதை கொள்ள வேண்டும். இப்படியாக வாழ்க்கையிலே ஏற்படும் வெற்றியிலும் தோல்வியிலும் மதுபானம் அருந்தி களித்திருக்க வேண்டும் என்று ஒரு மனிதனானவன் கூறிக் கொள்வான். அவன் நண்பர்களோடு சேர்ந்து குடித்து வெறித்திருக்கும் நாட்களிலே, தன் சின்ன மகனானவனை பிடித்து இதை குடி என்று அவனுக்கு கிண்ணத்தை கொடுப்பது போலபாசாங்கு செய்வான். அவனோ, அது வேண்டாம் என்று ஓடி ஒளிந்து கொள்வான். இந்தச் சம்பவமானது, வெறிகொண்ட தகப்பனானவருக்கு சுவாரசியமாகவே இருந்து வந்தது. மகனாவனனுடைய வாலிப நாட்கள் வந்தததும், இப்படியாக, ஒரு நாள் தகப்பனானவன் வெறித்திருக்கும் போது, தன் மகனானவனுக்கு கொஞ்சம் குடி என்று அவனை ஊக்குவித்து, எப்படியோ மகனானவனுக்கு தகப்பனானவன் குடிக்க கற்றுக் கொடுதுவிட்டான். மகனானவனோ, தன் வாலிபநாட்களிலே, தன் நண்பர்களோடு சேர்ந்து குடித்து, வெறிக்க, பல களியாட்டங்களிலே ஈடுபட ஆரம்பித்தான். இதனால் அவன் பல சீர்கேடான பழங்கங்களை தன் வாழ்விலே வழக்கமாக்கிக் கொண்டான். ஆனால், அந்த தகப்பனாவனோ, அதைக் குறித்து சற்றேனும் அக்கறையற்றவானாக, தன் மகனானாவன் வாலிபத்தை உல்லாசமாக கழிக்கட்டும் என்று சொல்லி கொள்வான். அதாதவது, தன் மகனானவன் தன் வாழ்க்கையை அழித்துப் போடுவதற்கு வழிவகுத்து கொடுப்பது, அந்த தகப்பனாவனுக்கு நன்மைனதாக தோன்றிற்று. பிரியமானவர்களே, பிரம்பைக் கையாடாதவன் தன் மகனைப் பகைக்கிறான் அவன்மேல் அன்பாயிருக்கிறவனோ அவனை ஏற்கனவே தண்டிக்கிறான் என்று பரிசுத்த வேதாகமம் கூறுகின்றது. பிள்ளைகளின் எல்லா ஆசை இச்சைகளை நிறைவேற்றவிடுவது, உண்மையான அன்பு அல்ல. நல்ல தகப்பனானவன், தன் பிள்ளையானவன் நடக்க வேண்டிய நல்ல வழியை போதிக்கின்றான். உள்ளும் புறமும் நல்ல சுபாவங்களிலே வளரும்படிக்கு கருத்தோடு கற்றுக் கொடுத்து, தன் பிள்ளைகளுக்காக அனுதினமும் ஜெபிக்கின்றவனாக இருக்கின்றான். எனவே பிள்ளைகள் நடக்க வேண்டிய வழியை, நற்சுபாவங்களை சின்ன வயதிலிருந்து அவர்களுக்கு கற்றுக் கொடுங் கள். பிள்ளைகள் ஆண்டவராகிய இயேசுவினித்திற்கு சேருவதைதடு த்து நிறுத்தி உங்கள் மேல் ஆக்கினைளை குவித்துக் கொள்ளாதிருங்கள்.

**நீதிமொழிகள் 22:6**

**பிள்ளையானவன் நடக்க வேண்டிய வழியிலே அவனை நடத்து; அவன் முதிர் வயதிலும் அதை விடாதிருப்பான்.**

**ஜெபம்:** என்னை நேசிக்கின்ற பரம தந்தையே, தெய்வீக சுபாங்களை நான் பற்றிக் கொண்டு, அவைகளை நான் நேசிப்பவர்களுக்கு கற்றுக் கொடுக்க, எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்து வழிடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# தடைகளை உடைத்துப் போடுங்கள்

ஒரு சமயம், சிறு பிள்ளைகளின்மேல் அவர் கைகளை வைத்து ஜெபம் பண்ணும்படிக்கு அவர்களை ஆண்டவராகிய இயேசு வினிடத்தில் கொண்டுவந்தார்கள். கொண்டுவந்தவர்களைச் சீஷர்கள் அதட்டினார்கள். இயேசு அதைக் கண்டு, விசனமடைந்து: சிறு பிள்ளை கள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள் அவர்களைத் தடைபண்ணாதிருங்கள் எவனாகிலும் சிறுபிள்ளையைப்போல் தேவனுடைய ராஜ்யத்தை ஏற்றுக்கொள்ளாவிட்டால், அவன் அதில்பிரவேசிப்பதில்லையென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று சொல்லி, அவர்களை அணைத்துக் கொண்டு, அவர்கள்மேல் கைகளை வைத்து, அவர்களை ஆசீர்வதித்தார்.

**மாற்கு 10:14**

**சிறு பிள்ளைகள் என்னிடத்தில்வருகிறதற்கு இடங்கொடுங்கள்; அவர்களைத் தடைபண்ணாதிருங்கள்**

அன்று சீஷர்கள் ஏதோ காரணத்தினால், சிறுபிள்ளைகள் இயேசுவினிடத்தில் வருவதற்கு தடையாக இருந்தார்கள். இன்று உங்களு கடைய பிள்ளைகள் ஆண்டவர் இயேசுவை அறிவதற்கு நீங்கள் தடையாக இருக்காதபடிக்கு எச்சரிக்கையுள்ளவர்ளாக இருக்க வேண்டும். இதோ, பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்தரம், கர்ப்பத்தின் கனி அவரால் கிடைக்கும் பலன் (சங் 127:4). எனவே, அவர்களை அவர்களின் குழந்தைப் பருவத்திலிருந்து, ஆண்டவராகிய இயேசுவை அறியும் அறிவிலே வளர்க்க வேண்டியது, பெற்றோர்களினதும், பெரியவர்களினதும் கடமையாக இருக்கின்றது. தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியை தேடுவதே, முதன்மையானதும், அவசியமானதும், வாழ்வின் அடித்தளமானதும் என்பதை அவர்களுக்கு கற்றுக் கொடுக்க வேண்டும். கர்த்தர் இயேசுவைவிட்டு அவர்களை நீங்கள் தூரப்படுத்தும்படியான தடைகளை உண்டு பண்ணும்போது, கர்த்தர் அதைக் குறித்து விசனமடைகின்றவராக இருக்கின்றார். அதுமட்டுமல்ல, என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிற இந்தச் சிறியரில் ஒருவனுக்கு இடறல் உண்டாக்குகிறவன் எவனோ, அவனுடைய கழுத்தில் ஏந்திரக்கல்லைக் கட்டி, சமுத்திரத்தின் ஆழத்திலே அவனை அமிழ்த்துகிறது அவனுக்கு நலமாயிருக்கும் என்றும் கூறியிருக்கின்றார். எனவே, உங்கள் பிள்ளைகளைக் குறித்த விஷயத்திலும், உங்களை பார்க்கும் மற்றய சிறுபிள்ளைகளைக் குறித்த விஷயத்திலும் நீங்கள் அவர்களை கர்த்திரிடத்தில் நடத்துவதைக் குறித்து கவனமுள்ளவர்களாக இருக்க வேண்டும். நாம் தடைகளை ஏற்படுத்தாமல், தடைகளை உடைக்கின்றவர்களாக வாழ வேண்டும்.

**ஜெபம்:** அரவணைக்கும் தேவனே, உம்மிடத்தில் சேருக்கின்றவர்களுக்கு, அறிந்தோ அறியாமலோ நான் தடையுள்ளவனாக மாறிவிடாதபடிக்கு எச்சரிக்கையுள்ள வாழ்க்கை வாழ கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழி யாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# மனதின் யோசனைகள்

இந்த சனிக்கிழமை மாலை கணித ஆசிரியர் வெளியூருக்கு போகின்றார் எனவே ஞாயிறு காலை வகுப்பிற்கு வரும்படி கூறினார் என்று மகனானவனொருவன் தன் பெற்றாரிடம் கூறினான். அந்த ஆசிரியர் மிகவும் பிரபல்யமானவர். அவருக்கு நேரமே இல்லை. எனவே, ஞாயிறு காலை நீ கணித வகுப்பிற்கு போ. ஒருநாள் ஆலயத்திற்கு செல்லாவிட்டால் என்ன? மாலையிலே ஜெபம்பண்ணுவோம் என்று தாயானவள் தன் மகனாவனுக்கு கூறுவதை, அந்தத் தாயாளவளு டைய வயது சென்ற தகப்பனானவர் கேட்டுக் கொண்டிருந்தார். உடனடியாக தன் மகளை நோக்கி: உன்னுடைய மகனானவனிற்கு நீ என்னத்தை கற்றுக் கொடுகின்றாய்? ஒருநாள் கணிதபாட த்தை விட்டு விடக்கூடாது ஆனால் ஒருநாள் தேவனை ஆராதிப்பதை விட்டு விடலாம் என்று கூறுகின்றாய். நீ எதற்கு முக்கியத்துவம் கொடு த்து அவனை வளர்க்கின்றாயோ, அவன் அதையே பற்றிக் கொள்வான். அதுமட்டு மல்ல, ஆண்டவர் இயேசுவிடம் அவன் சேருவதற்கு நீ தடையாக இருக்கின்றாய் என்பதை மறந்து போய்விடாதே, எனவே எச்சரிக்கையாயிரு என்று அவளை கண்டித்து கொண்டார். பிரியமானவர்களே, ஊரிலே பிரபல்யமான ஆசிரியரை திருப்திப்படுத்த, அந்த தாயானவள், தன்னுடைய மகனுடைய வாழ்விலே எதையும் மாற்றிப்போட ஆயத்தமுள்ளவளாக இருந்தாள். சற்று சிந்தித்துப் பாருங்கள். கல்வியைவிட தேவனைத் தேடுவதே முதன்மையானது என்று தன் மகனானவனுக்கும் அவனுடைய சகோதரர்களுக்கும் கற்பித்துக் கொடுக்க ஒரு அருமையான சந்தர்ப்பம் அந்த தாயாளவளுக்கு கிடைத்தது. அந்த நல்ல சந்தர்ப்பத்தில், அவள் கல்வியே முதன்மையானது என்ற விதையை தன் பிள்ளைகளுடைய வாழ்க்கையிலே விதைத்துவிட்டாள். சிறுக விதைக்கும் அந்தத் தீமையான விதை, வளர்ந்து பாதகமான பின்விளைவுகளை உண்டு பண்ணிவிடும். அந்த தாயானவளின் உள்ளத்தில் முதன்மையான இட த்தை பெற்றிருப்பது எது? அவள் தன் பிள்ளைக்கு அழியாத நல்ல பங்கை கொடுக்கின்றாளா? சற்று சிந்தித்துப் பாருங்கள்! அத்தோடு நிறுத்தி விடாமல், என்னுடைய உள்ளத்தில் எது முதன்மையான இடத்தை பெற்றிக்கின்றது என்ற கேள்விளை கேளுங்கள். தேவ வசனத்தின் வெளிச்சத்திலே உங்கள் உள்ளந்திரியங்களை ஆராய்ந்து அறிந்து கொள்ளுங்கள். கர்த்தர் உங்கள் யோசனைகளை அறிந்திருக்கின்றார். எனவே அவை அவருக்கு ஏற்புடையதாக இருப்பதாக.

**நீதிமொழிகள் 16:2**

**மனுஷனுடைய வழிகளெல்லாம் அவன் பார்வைக்குச் சுத்தமானவைகள்; கர்த்தரோ ஆவிகளை நிறுத்துப்பார்க்கிறார்.**

**ஜெபம்:** என் மனதின் யோசனைகளை அறிந்த தேவனே, உம்முடைய வழியைவிட்டு தவறிப்போகும் யோசனைகளை என்னைவிட்டு அகற்றி, மேன்மையானவைகளை பற்றிக் கொள்ள கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# வாஞ்சைகளும் தியாகங்களும்

இன்று நீங்கள், ஒற்றுமையாக இருந்து, வீட்டை சுத்தம் செய்வதற்கு உதவி செய்தால், நாளை உங்ளையெல்லாம் உல்லாசப் பூங்காவிற்கு அழைத்துக் கொண்டு செல்வேன் என்று ஒரு தகப்பனானவர் தன் பிள்ளைகளிடம் கூறினார். அதை கேட்டவுடனே, பிள்ளைகள் நாலு பேர்களும், ஒரும னமுடையவர்களானார்கள். தங்களுகிடையே இருந்த கருத்து முரண் பாடுகளை விட்டுவிட்டார்கள். அன்று முழுவதும் விளையாடாமலும், இன்ரநெற் ஊடக ங்களிலே நேரத்தை செலவிடாமலும், தங்கள் ஆசைகள் யாவையும் தியா கம் செய்து, வீட்டை சுத்தம் செய்வ தற்கு பல உதவிகளை செய்தார்கள். ஏனெனில், உல்லாசப் பூங்காவிற்கு செல்வதைக் குறித்த ஆசையின் மேன் மையினால் அவர்கள் தங்கள் வாழ் வில் எதையும் தியாகம் செய்ய ஆயத்தமுள்ளவர்களாக இருந்தார் கள். ஆம் பிரியமானவர்களே, உலகக் கிண்ண ஓட்டப் பந்தயப் போட் டியிலே தங்க பதக்கத்தை பெற்றுக் கொள்ள விரும்பும் ஒரு ஓட்டவீர னானவன் தன் வாழ்க்கையின் உல்லாசமான காரியங்களை தியாகம் செய்கின்றான். தெருவிலே, காணப்பட்ட ஏழையானவன் உணவு உண் ண வேண்டுமென என்று நினைத்த சிறுபிள்ளையா னவன், தனக்கு மிட் டாய் வாங்க தன் தந்தையார் கொடுத்த பணத்தை ஏழையானவனுக்கு கொடுத்து விட்டான். மேன்மையான காரியங்களை பெற்றுக் கொள்ளும் படி, காரியங்களை நடப்பிக்கின்றவர்கள் அவற்றை தியாகங்கள் வழி யாக வெளிக்காட்டுகின்றார்கள். அதுபோல, தேவனை நேசிக்கின் றேன் என்று கூறும் ஒரு கிறிஸ்தவனின், வாழ்வின் மேன்மையானது, அவன் செய்யும் தியாகங்களினாலே வெளிப்படுத்தப்படும். இன்று, பலர், கல்வி, வேலை, விளையாட்டுகள் போன்றவற்றிக்காக ஆலயத்திற்கு செல்வ தை தியாகம் செய்து விடுகின்றார்கள். இவர்களுடைய வாழ்க் கையின் மேன்மை என்ன? இவைகளினாலே தாங்களும், தங்களைப் பின்பற்றும் பிள்ளைகளும் ஆண்டவர் இயேசுவண்டை கிட்டி சேருவதை இவர்கள் தடை பண்ணுகின்றார்கள். அறியாமையினாலே, உணர்வற்ற வர்களாக, அழிந்து போகின்ற போஜனத்திற்காகவும், உலக பொருளு க்காகவும் தங்கள் வாழ்க்கையை முற்றாக தியாகம் செய்து விடுகின் றார்கள். அப் படியானல், அறிவையும், உணர்வையும் பெற்ற நாம், அழி யாத நித்திய ஜீவனுக்காக எப்படியாக தியாகமுள்ளவர்களாக இருக்க வேண்டும் என்று சிந்தித்துப் பாருங்கள். இந்தத் தியாகங்கள் யாவுமே நம்முடைய வாழ்க்கையின் நற்கிரியைகள் வழியாக உறுதிசெய்யப்பட வேண்டும்.

**1 கொரிந்தியர் 9:25**

பந்தயத்திற்குப் போரா டுகிற யாவரும் எல்லா வற்றிலேயும் இச்சையட க்கமாயிருப்பார்கள்.

**ஜெபம்**: நித்திய ஜீவனுக்கென்று என்னை அழைத்த தேவனே, அழியா மையை நான் தரித்துக் கொள்ளும்படிக்கு அழிவுள்ளவைகளை விட்டு விடும் உணர்வுள்ள இருதயத்தை எனக்கு தந்து என்னை வழிநடத்திச் செல்வீராக.. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# சாட்சியான வாழ்க்கை

> **உபாகமம் 6:7**
> **நீ அவைகளை உன் பிள்ளைகளுக்குக் கருத்தாய்ப் போதித்து**,

விடுமுறை நாட்களிலே, பிள்ளைகள் முற்றத்திலே இருந்து, பெற்றோரைப் போல பாசாங்கு செய்து (Pretend) விளையாடிக் கொண்டிருந்தார்கள். தகப்பனானவர் அருகே சென்று பார்த்த போது, நிலத்திலே பல சதுரங்களாக கோடிடப்பட்டு, கடதாசி கட்டுகள் ஒவ்வொரு சதுரங்களிலும் வெவ்வேறாக பிரித்து வைக்கப்பட்டிருந்தது. தகப்பனானவர் தன் மகனானவனை நோக்கி: அந்த கடதாசிகள் என்ன என்றும், நிலத்தில் கோலமிடப்பட்ட சதுரங்கள் என்ன என்றும் கேட்டார். அதற்கு அவன்: அப்பா, இது கடதாசி கட்டுகள் அல்ல. இது பணக் கட்டுகள். அது வெறும் சதுரங்கள் அல்ல, அது வங்கிகள். பணக்கட்டுகள் வேவ்வேறாக பிரித்துக் கட்டப்பட்டு, வங்கிகளிலே சேமித்து வைக்கப்பட்டுள்ளது. முதலாவது வங்கி சேமிப்பு: தற்போதைய செலவி ற்கு. இரண்டாவது: உழைக்க முடியாத மழைநாட்களுக்கு (Rainy days). மூன்றாவது: பிள்ளைகளுடைய கல்விச் செலவிற்கு, நான்காவது: முதலீடு செய்வதற்கு, ஐந்தாவது: உல்லாசப் பயணத்திற்கு என்று அவர்கள் கூறிக் கொண்டு இருந்த போது, தீடிரென்று காற்றுடன் மழை பெய்ய ஆரம்பித்தது. காற்றிலே அந்தப் பணக்கட்டுகள் யாவுமே பறந்து போயிற்று. மழையிலே நிலத்தில் போட்டப்பட்ட கோலங்களும் அழிந்து போய்விட்டது. பிள்ளைகளுக்கு அந்தக் காட்சி சுவாரசியமாக இருந்தது. ஆனால், தகப்பனானவருடைய உள்ளத்திலோ தன்னுடைய வாழ்க்கையின் சாரம்சம் இதுதான் என்ற உணர்வு அவன் உள்ளத்தில் ஏற்பட்டது. தேவனை அறிந்தி ருந்தும், அறியாதவன் போல வாழ்ந்துவிட்டேன். உழைப்பதும், சேகரிப்பதும், அதை கணக்கு பார்ப்பதுமே தன் பிள்ளைகளின் மனதிலே தன் னைக் குறித்து பதிந்திருக்கும் சாட்சி என்பதை அவன் நினைக்கும்போது மனவேதனையடைந்தான். ஒருவேளை பிள்ளைகள் தங்கள் தந்தையானவரின் ஐசுவரியத்தைக் குறித்து மேன்மைபாராட்டலாம் ஆனாலும், அதைவிட அழியாத மேன்மையை பற்றிக் கொள்வது எப்படி என அந்த தந்தையானவர் தன் பிள்ளைகளுக்கு வாழ்ந்து காட்டவில்லை. பிரியமானவர்களே, தேவனாகிய கர்த்தருடைய வார்த்தைகள் உங்கள் இருயத்தில் இருக்கக்கடவது. வீட்டில் உட்கார்ந்திருக்கிறபோதும், வழியில் நடக்கிறபோதும், படுத்துக்கொள்ளுகிறபோதும், எழுந்திருக்கிறபோதும் அவைகளைக் கருத்தாய் உங்கள் பிள்ளைகளுடன் பேசுங்கள். அழியா ததும், வாடா ததுமான நிலையான பரலோக பொக்கிஷத்தை நாடித் தேடுங்கள். உங்கள் பிள்ளைகளும் அதைப் பின்தொடர்வார்கள்.

**ஜெபம்**: பரலோக தேவனே, அழிகின்ற இந்த உலகத்தின் பொக்கிஷத்தை என் வாழ்வில் மேன்மைப் படுத்தாமல் நிலையான பரலோக பொக்கிஷத்தை வாஞ்சித்து தேட உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

📖 மாலை வாசகம் – 2 நாளாகமம் 26:5

# நலமானவைகளை பற்றிக் கொள்ளுங்கள்

என் குடும்ப தேவைகளை யார் சந்திப்பார்? நான் உழைக்காமல் சோம் பேறியாக இருக்க முடியாது. கிடைத்திருக்கும் நல்ல வேலையைவிட்டு விடுவது மதியீனமான செயல் அல்லவா? குடும்பத்தின் தேவைகளை சந்திக்க சில ஆரதனைகளை தவறவிட்டால் குற்றமா என்று ஒரு விசு வாசியானவன் தன் மேய்ப்பரானவரிடம் கேட்டான். அதற்கு மேய்யப ரானவர்: மகனே, நான் உன்னை குற்றப்படுத்தும்படிக்கு இங்கு வரவி ல்லை. நீ உன் குடும்பத் தேவை களை நன்றாக கவனிக்க வேண் டும். உலகதேவைகளை மட்டுமல்ல, அதிலும் மேன்மையான ஆவிக் குரிய தேவைகள் உண்டு. உன் பிள் ளைகள் சிறியவர்கள். தேவபய த்தில் அவர்கள் வளரும்படி அவர் களை பயிற்சிவிற்பதற்கு இது நல்ல நேரம். குடும்பமாக தேவனை ஆராதித்து, உன்னுடைய சாட்சியுள்ள விசுவாச வாழ்க்கையை அவ ர்களுக்கு நீ காண்பிப்பதற்கு நல்ல சந்தர்ப்பம். நீ சத்திய வேதத்தின் வார்த்தைகளை அறிந்தவன். எனவே, ஞானமான தீர்மானங்களை வாழ் க்கையிலே எடுத்துக் கொள். உன் இருதயத்தில் நீ எதை மேன்மைப் படுத்துகின்றாய் என்பதைக் குறித்து எச்சரிக்கையாக இரு என்று அவ னுக்கு ஆலோசனை கூறினார். பிரியமானவர்களே, நன்மையான வாழ் விற்கும், தீமையான வாழ்விற்கும் ஒரு சிறிய ஆரம்பம் உண்டு. எனவே நம்முடைய வாழ்க்கையின் தீர்மானங்களை குறித்து நாம் எச்சரிக்கை யாக இருக்க வேண்டும். நமக்கு தேவ ஆலோசனை கூறுகின்றவர் களை எதிர்த்து விவாதம் செய்வதையும், நாம் தெரிந்து கொள்ளும் வழிகளை நியாயப்படுத்த முயற்சி செய்யவதற்கு முன்னும், நம்முடைய வழிகளை தேவவார்த்தையின் வெளிச்சத்திலே ஆராய்ந்து பார்க்ககற் றுக் கொள்ள வேண்டும். பின்வரும் இரண்டு தெரிவுகள் உங்களுக்கு கொடுக்கப்பட்டால் நீங்கள் எதைத் தெரிந்து கொள்வீர்கள்? 1. பொரு ளாதார செழிப்பும், ஆவிக்குரிய வறட்சியையும் 2. பொருளாதார வறட் சியும், ஆவிக்குரிய செழிப்பையும். முதலாவது தேவனுடையு ராஜ்ய த்தையும் அவருடைய நீதியையும் தேடுகின்றவர்கள் ஆவிக்குரிய செழி ப்பை அடைகின்றார்கள். பரமபிதாவானவர், அவர்களுடைய இந்த உலகத்தில் வாழ்க் கையின் தேவைகள் சந்திக்கின்றார். ஆனால், வாழ் வில் உண்டாகும் பொருளாதார செழிப்பு நிம்மதியைத் தருவதில்லை. சமாதானமான வாழ்வு தேவனுடைய ஈவு. அதை ஒருவரும் விலை கொடுத்தது வாங்கிக் கொள்ள முடியாது. எனவே, உங்கள் வாழ்க்கை யிலே நல்ல தீர்மானங்களை எடுத்தக் கொள்ளுங்கள்.

**சங்கீதம் 34:10**

**கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையுங் குறைவுபடாது.**

**ஜெபம்:** சகலமும் அறிந்த தேவனே, என் வாழ்விலே நெருக்கம் ஏற்படும் போது, நான் நல்ல வழியை தெரிந்து கொள்ளும்படிக்கு எனக்கு ஞான முள்ள இருதயத்தை தந்து வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழி யாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# வாழ்வின் திட்டங்கள்

தேவன் ஞானத்தை கொடுத்திருக்கின்றார். எனவே நான் திட்டமிட்டு வாழ்வதில் என்ன தவறு? திட்மிடுவதால் விசுவாசம் அற்றுப் போய் விடுமோ என்று ஒரு மனிதனானவன் தன் போதகரிடம் கேட்டான். அதற்கு போதகரானவர்: ஒரு ஊரிலே வாழ்ந்து வந்த விசுவாசியானவன், கண க்கியலாளராக இருந்ததால், தன் குடும்ப கணக்கு வழக்குகளைக் குறி த்த அடுத்த இரண்டு வருடங்களுக்குரிய தெளிவான பொருளாதார திட்டத்தை மிக துல்லியமாக போட்டுக் கொண்டான். அவன் கணக்கியலிலே கற்றுக் கொண்டவைகளையும், அவனது அனுபவமுமே அந்த திட்டத்தின் அடித்தளமாக இருந்தது. அந்தத்திட்டத்திலே கணக்கியல் அம்சங்கள் யாவும் கருத்தில் கொள்ளப்பட்டது. அவனுடைய திட்டத்தில் சேர்க்கப்பட வேண்டிய ஒரு முதன்மையான காரியத்தை அவன் விட்டுவிட்டான். அது என்ன என்று உனக்கு புரிகின்றதா என்று போதகரானவர் அந்த மனிதனானவனிடம் கேட்டார்? அதற்கு அவன்: அவன் விசுவாசியானவனாக இருந்த போதும், கர்த்தருடைய வார்த்தைகளை விட்டுவிட்டான் என்று கூறினான். சரியாக சொன்னாய் மகனே! திட்டம் போட்டு வாழ்வதில் தவறில்லை. அந்த திட்டம் யாருடையது? அந்த திட்டத்திலே கர்த்தர் எங்கே இருக்கின்றார்? உலக ஞானமோ அல்லது தேவ ஞானமோ எது அங்கே மேன்மைப் படுத்தப்பட்டுள்ளது? நம்முடைய திட்டங்கள் யாவும் நம்மைக் குறித்த தான தேவனுடைய திட்டத்திற்குள் அடங்கி இருக்க வேண்டும். ஆனால் இன்று மனிதர்கள் உலக ஞானப்படி திட்டங்களைப் போட்டு விட்டு அந்த திட்டத்திற்குள் தேவனை அடக்குவதற்கு முயல்கின்றார்கள். சுய திட்டத்தில் வாழ்கின்றவர்களிடம் தேவ ஞானம் இல்லை. அவர்கள் விசுவாசமற்ற வாழ்க்கையை தங்களுக்கென தெரிந்து கொள்கின்றார்கள். ஆகையால், நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு, இவைகளின்படி செய்கிறவன் எவனோ, அவனைக் கன்மலையின்மேல் தன் வீட்டைக் கட்டின புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பிடுவேன். பெரு மழை சொரிந்து, பெருவெள்ளம் வந்து, காற்று அடித்து, அந்த வீட்டின்மேல் மோதியும், அது விழவில்லை. ஏனென்றால், அது கன்மலையின்மேல் அஸ்திபாரம் போடப்பட்டிருந்தது என்று கர்த்தராகிய இயேசு கூறியிருக்கின்றார். எனவே நம்முடைய திட்டம் தேவனால் அங்கீகரிகப்பட்டதாக இருக்க வேண்டும். அந்த திட்டம் நம் வாழ்விலே நிறைவேறும்படிக்கு நாம் தேவனுடைய வேளைக்காக் காத்திருந்து ஜெபிக்க வேண்டும் என அறிவுரை கூறினார்.

**யோவான் 15:5**

**என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது.**

**ஜெபம்:** காலங்களை அறிந்த தேவனே, என் வாழ்வின் திட்டங்கள் யாவும் என்னைக் குறித்ததான உம்முடைய திட்டத்திற்குள் அடங்கியிருக்கும்படிக்கு எனக்கு தேவ ஞானத்தைத் தந்து வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# எது முதன்மையானது?

நவீனமயமடைந்து கொண்டிருக்கும் இந்த உலகிலே, ஒரு மனிதனானவன், உயிர்வாழ்வதற்கு அவசியமான அடிப்படைத் தேவைகளை சந்திப்பதற்கு ஒரு வேலையை அவன் பெற்றுக் கொள்வதற்குரிய கல்வித் தகமைகளானது உயர்த்தி வைக்கப்பட்டிருக்கின்றது. அதனால் பெற்றோர்கள் தங்களுக்கு கூடுமானவரை, தங்கள் பிள்ளைகளின்காக சின்னவயதிலிருந்து கல்வி கற்பதற்கான வசதிகளை அமைத்துக் கொடுக்கின்றார்கள். கல்வி அறிவு பெருகுவதற்கு, தங்கள் பிள்ளைகளின் மழலைப் பருவத்திலிருந்தே தங்களால் கூடுமானவரை பல முயற்சிகளை செய்கின்றார்கள். கல்வியிலே தேர்ச்சியடைவதாலும், நல்ல உத்தியோகங்களிலே அமர்வதாலும் மனிதர்கள் சமாதானமான வாழ்வை பெற்றுக் கொள்ளக் கூடுமோ? இல்லை! எனவே, சின்ன வயதிலிருந்து பிள்ளைகளை தேவ பயத்திலே வளர்ப்பது, இவ்வுலகிலே சமாதானமான வாழ்வக்கையும், மறு உலகிலே நித்திய ஜீவனை அடைவதற்கும் இன் றியமையாதது. கல்விக்கும், தேவ பயத்திற்கும் சின்ன வயதிலிருந்து பயிற்சி அவசியமானது. இவற்றில் எதை தங்கள் பிள்ளைகளுடைய வாழ்விலே முதன்மைப்படுத்த போகின்றார்கள் என்பது பெற்றோருடைய தீர்மானம். சில பெற்றோர், இப்போது பிள்ளை படிக்கட்டும், வயது வந்தபின்பு ஆண்டவரை தேடட்டும் என்ற எண்ணமுடையவர்களாக, தேவ பயத்தில் பிள்ளைகள் வளர்வதற்கு வேண்டிய அனுதின வேத வாசிப்பு, ஊக்கமான ஜெபம், பிள்ளைகளுக்கு வேண்டிய வேதபடிப்புக்கள், சபைகூடிவருதல் போன்றவற்றை தள்ளிப் போடுகின்றார்கள். இதனால் பெற்றோர் தங்கள் பிள்ளைகள் தேவனாகிய கர்த்தரை அறிவதற்கு இடறலாக மாறிவிடுகின்றார்கள். பிரியமானவர்களே, இந்த உலகிலே தரித்திரர்கள் என்று கருதப்படுகின்றவர்களை விசுவாசத்தில் ஐசுவரியவான்களாகவும், தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குத் தாம் வாக்குத்தத்தம்பண்ணின ராஜ்யத்தைச் சுதந்தரிக்கிறவர்களாகவும் தெரிந்துகொள்ளவில்லையா? என்று பரிசுத்த வேதாகமம் கூறுகின்றது. பிள்ளைகளுக்கு நன்மை செய்ய விரும்பும் பெற்றோர், தேவ பயத்தில் வளர்வதற்கு முதலிடம் கொடுக்கின்றார்கள். தங்கள் ஆத்துமாவுக்கு நன்மையை விரும்பும் பெரியோர் தேவ பயத்தோடு தங்கள் வாழ்க்கையை காத்துக் கொள்கின்றார்கள்.

**நீதிமொழிகள் 22:6**

**பிள்ளையானவன் நடக்கவேண்டிய வழியிலே அவனை நடத்து; அவன் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பான்.**

**ஜெபம்**: சகலமும் அறிந்த தேவனே, உம்மோடு வாழ்வதே என்னுடைய பாக்கியம் என்று உணர்ந்து, உம்முடைய வழிகளில் நடப்பதையே என் வாழ்வில் மேன்மைப்படுத்த எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# ஞானத்தின் ஆரம்பம்

வாலிப பருவத்தை அடைந்த மாணவனானவன், வாழ்க்கையிலே தன்னுடையகனவுகளை (Dreams) தான் பின்பற்ற வேண்டும், தான் முன்வைத்த குறிக்கோளை பற்றிக் கொள்ள வேண்டும் என்பதைக் குறித்து கவர்ச்சிகரமான ஒரு உரையை ஆற்றினான். அதை கேட்டுக் கொண்டிருந்த அவனுடைய பாட்டனார், அவனை அழைத்து, தம்பி இன்று பாடசாலை பட்டமளிப்பிலே நீ உரையாற்றும் போது, உன் பேச்சு நடையையும், உரையின் சாரம்சத்தையும் அநேகர் மெச்சினார்கள். ஆனால், நீ உன் வாழ்க்கையில் இன்றியமையாத அம்சமொன்றை மறந்து போனாய். நாம் நம்முடைய விருப்பத்தையும், கனவுகளையும் நிறைவேற்றும்படி வேறுபிரிக்கப்படவில்லை. நம்மைக் குறித்ததான பிதாவாகிய தேவனுடைய சித்தத்தை நம்முடைய வாழ்க்கையில் நிறைவேற்றும்படியே அழைக்கப்பட்டிருக்கின்றோம் என்பதை நீ ஒரு போதும் மறந்து விடாதே என்று தன் பேரனானவனுக்கு அறிவுரை கூறினார். பிரியமானவர்களே, அவருடைய சித்தத்தை நிறைவேற்றுவதற்கு நம் வாழ்க்கையிலே தடையாக வரும் எந்த உலக நன்மைகளும், உண்மையான நன்மைகள் அல்ல. இன்று பலர் தேவஞானத்தை, சிறுவர்கள் அசட்டை பண்ணும்படிக்கு, உலக ஞானத்தை மேன்மைப்படுத்தி, பெரும்பாலும் அதையே கற்றுக் கொடுக்கின்றார்கள். இப்படியாக உலக ஞானத்தை சிறுவர்களுக்கு கற்றுக் கொடுக்கின்றவர்கள் சிறுவர்கள் தேவ ஞானத்தை அற்பமாக எண்ணும்படிக்கு காரணர்களாக மாறிவிடுகின்றார்கள். சிறுவர்களுக்கு நன்மைசெய்வதற்கு பதிலாக, சிறுவர்களுடைய வாழ்க்கையிலே பெரும் இடறல்களாக இவர்கள் தங்களை மாற்றிக் கொள்கின்றார்கள். இப்படியாக இந்த உலகிலே வாழும் சில கல்விமான்கள், தேவ ஞானத்தை அற்பமாக எண்ணுவதால், தேவஞானம் அவமாய் போய்விடுவதில்லை. மெய்ஞானம் தேவனிடத்திலிருந்து மட்டுமே வருகின்றது. கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம். அவர் தம்மை விசுவாசிக்கின்றர்களுக்கு ஞானத்தை அருளும் ஆவியை கொடுக்கின்றார். இன்று உலகிலே கல்விமான்கள் என்று பெயர்பெற்ற சிலர், தேவனுடைய போதகத்தை அசட்டை பண்ணுகிறார்கள். அதனால் அவர்கள் சர்வ வல்லமையுள்ள தேவனுடைய பார்வையிலே தங்களை மூடராக்கிக் கொள்கின்றார்கள் என்று பரிசுத்த வேதாகமம் கூறுகின்றது (நீதிமொழிகள் 1:7). எனவே மெய்ஞானத்தை கண்டடைய விரும்புகின்றவர்கள், தங்கள் வழியை கர்த்தரிடத்திலே ஒப்புவித்து, அவருடைய வார்த்தையின் வழியிலே வாழக்கடவர்களாக.

**நீதிமொழிகள் 1:7**

**கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்**

**ஜெபம்**: ஞானத்தின் ஆவியை அருளும் தேவனே, இந்த உலகத்தின் ஞானத்தினால் என் மனக் கண்கள் இருளடைந்து போய்விடாதபடிக்கு, பிரகாசமுள்ள மனக் கண்களை தந்து என்னை உம் வழியிலே நடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# தேவ பக்தி

உங்களைப் போல கல்லாதவர்களுக்கும், ஏழைகளுக்கும் தான் கடவுள் பக்தி தேவை. ஏனெனில் உங்களிடம் வேறொன்றும் இல்லை. ஆனால் என்னைப் போல சகல கலைகளும் கற்றுத் தேர்ந்தவர்களுக்கு கடவுள் பக்தி தேவையில்லை என்று ஒரு பெருமையுள்ள மனிதனானவன், தேவ பக்தியோடு வாழும் எளிமையான ஒரு குடியானவைப் பார்த்து கூறினான். அந்த பெருமையுள்ள மனிதனானவன், உலக கலைகளிலே கற்றுத் தேர்ந்தவனும், பிரபல்யமானவனுமாக இருந்ததால், அந்த ஊரிலே வாழ்ந்த அநேகர், அவன் கூறிய கூற்றை அங்கீகரித்தார்கள். எளிமையான வாழ்க்கை வாழும் தேவ பக்தியுள்ள விசுவாசியையோ அவர்கள் அற்பமாக எண்ணினார்கள். பிரியமானவர்களே, உயர்ந்தவன், தாழ்ந்தவன், ஏழை, பணக்காரன் என்ற எந்தப் பாகுபாடும் இல்லாமல், ஒருவனும் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடைய வேண்டும் என்று ஆண்டவராகிய இயேசு அன்போடு அழைக்கின்றார். அவருடைய அழைப்பை ஏற்று அவர் மேல் விசுவாசம் வைக்கின்றவனுக்கு அவர் இரட்சிப்பை அருளுகின்றார். எப்படியெனில், சகோதரரே, நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்பைப் பாருங்கள் மாம்சத்தின்படி ஞானிகள் அநேகரில்லை, வல்லவர்கள் அநேகரில்லை, பிரபுக்கள் அநேகரில்லை. ஞானிகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பைத்தியமானவைகளைத் தெரிந்துகொண்டார். பலமுள்ள வைகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பலவீனமானவைகளைத் தெரிந்துகொண்டார். உள்ளவைகளை அவமாக்கும்படி, உலகத்தின் இழிவானவைகளையும், அற்பமாய் எண்ணப்பட்டவைகளையும், இல்லாதவைகளையும், தேவன் தெரிந்துகொண்டார். மாம்சமான எவனும் தேவனுக்கு முன்பாகப் பெருமைபாராட்டாதபடிக்கு அப்படிச் செய்தார் (*1 கொரி 1:26-29*). இவ்வுலகத்தின் ஞானம் தேவனுக்கு முன்பாகப் பைத்தியமாயிருக்கிறது. அப்படியே, ஞானிகளை அவர்களுடைய தந்திரத்திலே பிடிக்கிறாரென்றும், ஞானிகளுடைய சிந்தனைகள் வீணாயிருக்கிறதென்று கர்த்தர் அறிந்திருக்கிறாரென்றும் எழுதியிருக்கிறது (*1 கொரி 3:19-20*). பிரியமானவர்களே, நாம் கற்றவர்களாகவோ அல்லது கல்லாதவர்களாகவோ இருந்தாலும், உலகத்தாரைப் போல மனிதர்களுடைய அங்கீகாரத்தை நாடுபவர்கள் அல்லர். நாம் நம்முடைய சிந்தனை சொல் செயல்கள் யாவும் தேவனுக்கு ஏற்புடையதாக இருப்பதையே நாம் எப்போதும் வாஞ்சிப்போமாக.

**சங்கீதம் 4:3**

**பக்தியுள்ளவனைக் கர்த்தர் தமக்காகத் தெரிந்துகொண்டாரென்று அறியுங்கள்;**

**ஜெபம்**: என்னை உமக்கென தெரிந்து கொண்ட தேவனே, உமது அழைப்பின் மேன்மையை உணராதபடிக்கு இந்த உலகத்திலே கிரியைசெய்யும் அந்தாரத்தின் அதிகாரம் என்னை மேற்கொள்ளாதபடி காத்துக் கொள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# நம்முடைய பெலன் எங்கே?

ஒரு தேசத்தை ஆண்டு வந்த அரசனானவன், தன் படைப் பலத்தையும், ஆயுதபலத்தையும், பொருளாதார மேம்பாட்டையும், வெளிக்காட்டும்படிக்கு ஒரு நாளை நியமித்திருந்தான். முன்குறித்த அந்த நாளிலே, சகல படைகளும், இருப்பு இரதங்களோடும், வலிமைமிக்க சர்வாயுதங்களோடும் பகுதிபகுதியாக அணிவகுத்து வந்தது. தேசத்தின் செழிப்பை வெளிக்காட்டும் பல கண்காட்சி கூடங்கள் அமைக்கப்பட்டிருந்தது. ஜனங்கள் குடித்து, புசித்து, ஆடிப்பாடி தங்கள் தேசத்தின் மேன்மையை உணர்வுபூர்வமாக கொண்டாடினார்கள். ஆம், இத்தகைய காட்சிகளை இன்றும் கூட நாம் செய்தி ஊடகங்கள் வழியாக காண்கின்றோம். இத்தகைய காட்சிகளின் மேன்மை பாராட்டுதலின் நோக்கம் என்ன? இவைகளினாலே தேசத்திற்கு இரட்சிப்பு உண்டாகுமோ? சற்று சிந்தித்துக் பாருங்கள். தேசத்தின் குடிகளில் சிலர் தங்கள் அறியாமையினாலே, உலக ஞானத்தையும், அதினால் அவர்களுக்கு உண்டான பெலத்தையும் குறித்து பெருமைபாராட்டுகின்றார்கள். பிரியமான தேவபிள்ளைகளே, இப்பொழுது இருக்கிற வானங்களும் பூமியும் அந்த வார்த்தையினாலேயே அக்கினிக்கு இரையாக வைக்கப்பட்டு, தேவபக்தியில்லாதவர்கள் நியாயந்தீர்க்கப்பட்டு அழிந்துபோகும் நாள்வரைக்கும் காக்கப்பட்டிருக்கிறது. (2 பேது 3:7) தேவ பிள்ளைகளாகிய நாமோ, தேவனுக்கு முன்பாக நம்மைத் தாழ்த்தி தேசத்திற்காக கண்ணீரோடு ஜெபிக்க வேண்டும். தேசத்தை ஆளுகின்றவர்களாக வேண்டுதல் செய்ய வேண்டும். சில வேளைகளிலே ஆளுகின்றவர்கள் தேவனுக்கு விரோதமாக வைராக்கியம் கொள்ளலாம். அது அவர்களுடைய அறியாமை. சிலர் இரதங்களைக்குறித்தும், சிலர் குதிரைகளைக் குறித்தும் மேன்மைபாராட்டுகிறார்கள் நாங்களோ எங்கள் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தைக்குறித்தே மேன்மைபாராட்டுவோம். தேவனுக்கு பயந்து அவருக்கு பிரியமாக வாழ்ந்த, தாவீது ராஜா அறிக்கை செய்தது போல எனக்கு விரோதமாகச் சுற்றிலும் படையெடுத்து வருகிற பதினாயிரம்பேருக்கும் நான் பயப்படேன். கர்த்தாவே, எழுந்தருளும் என் தேவனே, என்னை இரட்சியும் என்று அறிக்கை செய்வோமாக. இரட்சிப்பு கர்த்தருடையது. தேவரீருடைய ஆசீர்வாதம் உம்முடைய ஜனத்தின்மேல் இருப்பதாக.

**சங்கீதம் 3:8**

இரட்சிப்பு கர்த்தருடையது; தேவரீருடைய ஆசீர்வாதம் உம்முடைய ஜனத்தின்மேல் இருப்பதாக

**ஜெபம்:** இரட்சிப்பின் தேவனே, நீர் நகரத்தைக் காத்துக் கொள்ளாவிட்டால், காவலாளர் விழித்திருக்கிறது விருதா என்பதை உணர்ந்து உம்மை நோக்கி பார்க்கும் உணர்வுள்ள இருதயத்தை எனக்கு தந்தருள்வீராக.. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# ஞானமும் நற்கிரியைகளும்

“எங்களுக்கு கொடுக்கப்பட்ட நாட்களிலே நற்கிரியைகளை செய்து ஞான முள்ளவர்களாக வாழ வேண்டும். இவைகள் நம் வாழ்வில் இருந்தால் போதும்” என்று ஒரு மனிதனாவன் வாழ்க்கையின் அவசியமானவைக ளைக் குறித்து தன்னுடைய தத்துவத்தை கூறிக் கொண்டான். இந்தக் கூற்றுக்களை மேலோட்டமாக பார்க்கும் போது அவற்றில் தவறு என்ன என்று கேட்க தோன்றுகின்றதல்லவா? அந்த மனிதனானவனுடைய நீதியின் கிரியைகளிலே தேவனைக் குறித்த விசுவாசம் எங்கே? அவன் கூறும் ஞானத்திலே தேவ பயம் எங்கே? ஆத்தும இரட்சிப்பானது நம்முடைய நீதியின் கிரிகைகளினாலே உண்டாவதில்லை. ஆண்டவர் இயேசுவை இரட்சகர் என்று விசுவசிப்பதினால் உண்டாகின்றது. கர்த்தருக்கு பயந்து அவர் வழியிலே நடக்காதவன் ஞானமற்றவனாகவே இருக்கின்றான். எனவே தன் தத்துவத்தை கூறிய மனிதனுடைய நீதி இந்த உலகத்தின் நீதியாக இருக்கின்றது. அவன் கொண்டுள்ள ஞானமும் உலகத்திற்குரிய ஞான மாகவே இருக்கின்றது. பிரியமானவர்களே, மனிதர்களுடைய நீதியின் கிரி யைகள் தேவனுக்கு முன்பாக அழுக்கான கந்தைபோல இருக்கின்றது. (ஏசாயா 64:6) இவ்வுலக ஞானம் தேவனுக்கு முன்பாகப் பைத்திய மாகயிருக்கின்றது (1 கொரி 3:19). கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிப்பு உண்டாகின்றது. தேவனுடைய இரட்சிப்பைப் பெற்றவன், தேவ நீதியின் கிரியைகளை, தேவனுடைய நாமத்தின் மகிமைக்காக தன் வாழ்விலே நடப்பிக்கின்றான். தேவனுக்கு பயந்து அவர் வழியிலே நடக்கின்றவனுக்கு தேவனானர் மெய் ஞானத்தை அருளுகின்றார். தேவ ஞானம் அவனிடமிருப்பதால், அவன் தன் ஆத்துமாவை தீமைக்கு விலக்கி, பரிசுத்தத்தை தேவபயத்தோடு தன் வாழ்வில் காத்துக் கொள்கின்றான். இன்று சில தேவ பிள்ளைகளும்கூட விசுவாசமும், தேவபயமும் தங்கள் வாழ்க்கையிலே நிறைவேறி முடிந்த காரியங்கள் என்று எண்ணங் கொண்டவர்களாக, ஞானமாக வாழ்க்கை நடத்த வேண்டும், நற்கிரியைகளை செய்ய வேண்டும் என்று உலகத்திலே வாழும் தேவனை அறியாத மனிதர்களைப் போல மாறிப்போய்விடுகின்றார்கள். அனுதினமும் கிறிஸ்துவோடு இசைந்திருந்து நிலைத்திருக்கும் வாழ்விலே தேவ ஞானமும், தேவ நீதியும், மெய்யான பரிசுத்தமும், மீட்பின் அனுபவமும் உண்டாயிருக்கும். எனவே நாம் கிறிஸ்துவிலே நிலைத்திருந்து மிகுந்த கனிகளை கொடுக்கும் வாழ்க்கை வாழ்வோமாக.

**1 கொரிந்தியர் 1:31**

அவரே தேவனால் நமக்கு ஞானமும் நீதியும் பரிசுத்தமும் மீட்புமானார்.

**ஜெபம்:** பிதாவாகிய தேவனே, நான் மறுபடியும் என் சொந்த கிரியைகளைக்குறித்து மேன்மைபாராட்டதபடிக்கு, கிறிஸ்துவிலே நிலைத்திருந்து, மிகுந்த கனி கொடுக்கும் வாழ்க்கை வாழ நீர் கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# சீக்கிரமாய் கடந்து போகும் வாழ்க்கை

**பிரசங்கி 12:13**

**காரியத்தின் கடைத்தொகையைக் கேட்போமாக, தேவனுக்குப் பயந்து, அவர் கற்பனைகளைக் கைக்கொள்**

ஒரு ஊரிலே வாழ்ந்து வந்த சன்மார்க்கனான மனிதனொருவன், கல்வியிலும், விளையாட்டுத் துறையிலும், செய்யும் வேலைகளிலும் சிறந்து விளங்கினான். அவன் உடற்பெலமுள்ளவனும், செல்வ செழிப்புள்ளவனும், மனிதர்கள் மத்தியிலே நன்மதிப்பு பெற்றவனுமாக இருந்து வந்தான்.பார்ப்பவர்கள்எல்லாம் "பாருங்கள்வாழ்ந்தால் அவனைப் போல வாழ வேண்டும்" என்று கூறும்படிக்கு அவன் வாழ்க்கை நிறைவாக காணப்பட்டது. அவனுக்கு உண்டான உடல் பெலத்தினாலும், உலக ஞானத்தினாலும், ஐசுவரியத்தினாலும் அவன் தனது தன்நம்பிக்கையை தன் வாழ்விலே மேன்மைபாராட்டி வந்தான். காலங்கள் கடந்து சென்ற போது, அவன் உடலிலே பெலன் குறைந்து போவதை அவன் கண்டு கொண்டான். உலக ஞானத்திலே அதிகமாக நம்பியிருந்தவன், தன் உடலிலே ஏற்பட்ட சில வியாதிகள் மருத்துவ அறிவுக்கு அப்பாற்பட்டதாக இருந்ததால், அவனுக்கிருந்த பெருந்தொகையான ஐசுவரியமும் அவனுக்கு உதவி செய்ய முடியவில்லை என்பதைக் கண்டு ஆச்சரியப்பட்டான். மருத்துவமனையிலே ஆறடி நீளமும், நாலடி அகலமுமான கட்டிலே அவனுக்குரிய உறைவிடமாகிவிட்டது. கற்றவைகள் யாவுமே மறந்து போய்விட்டான். முன்பு போல பேச முடியவில்லை. தன் உள்ளத்திலே ஒரு வெற்றிடமிருப்பதை அவன் உணர்ந்து கொண்டான். மனித வாழ்வு எளிதில் உடைந்து போகின்ற பாத்திரம்போல இருக்கின்றது என்பதை அறிந்து மனச்சோர்வடைந்தான். அவன் தனது பெலனுள்ள வாழ்நாட்களில் கர்த்தரை தேடுவது அநாவசியமானது என்று அசட்டை செய்து அழிந்து போகும் இந்த உலகத்தின் அறிவிலும், பெலத்திலும் மேன்மைபாராட்டி வந்தான். பிரியமானவர்களே, மனுஷனுடைய நாட்கள் புல்லுக்கு ஒப்பாயிருக்கிறது. வெளியின் புஷ்பத்தைப் போல் பூக்கிறான். காற்று அதின்மேல் வீசினவுடனே அது இல்லாமற் போயிற்று. அது இருந்த இடமும் இனி அதை அறியாது. எனவே, பெலன் குன்றிப் போக முன்னும், தீங்கு நாட்கள் வருவதற்கு முன்னும், உன் கண்களில் வெளிச்சம் குறைந்து வாழ்க்கையின் தீபம் அணைந்து போகும் முன்னும், மண்ணாணது மண்ணுக்கு திரும்பமுன்பும், சிருஷ்டித்த தேவனிடம் திரும் புங்கள். கர்த்தருடைய கிருபையோ அவருக்குப் பயந்தவர்கள்மேலும், அவருடைய நீதி அவர்கள் பிள்ளைகளுடைய பிள்ளைகள்மேலும் அநாதியாய் என்றென்றைக்கும் உள்ளது.

**ஜெபம்**: கிருபை நிறைந்த தேவனே, காலம் கடந்து பெலன்குறைந்து போகும் நாட்கள் வருமுன், உணர்வடைந்து உம்மை பற்றிக் கொண்டு வாழும் வாழ்க்கையை வாழ எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# விழிப்புள்ளவர்களாக இருங்கள்

ஒரு ஆலயத்திற்கு சென்று வந்த வாலிபனானவன், சபை கூடிவருதலைக் குறித்து தன் கருத்துக்களை வெளிப்படையாக தெரிவித்து வந்தான். ஒரு சில ஞாயிறு அராதனைக்கு சமுகமளிக்க தவறினால் என்ன? ஆண்டவர் நம்மை நரகத்திற்கு அனுப்பி விடுவாரா? கல்வி நிலையத்திலே பாடங்களை படிக்க தானே செல்கின்றேன். அது நன் மையானதுதானே என்று கூறிக் கொண்டான். அதைக் கேட்ட அனுபவமிக்க மேய்ப்பரானவர், அவன் காரியங்களை உணர்ந்து கொள்ளும் நாட்கள் வரும் என்று அவன்மேல் பொறுமையுள்ளவராக இருந்து வந்தார். ஆனால், அவனோ, தன் கருத்துக்களை மற்றய வாலிபர்களுக்கு கூறி, அவர்களில் சிலரின் மனதை குழப்பி, சில விவாதங்களையும் ஏற்படுத்தி வந்தான். அதனால், மேற் குறிப்பிட்ட வாலிபனானவன் தன் மேன்மையான அழைப்பைக் குறித்து, உணர்வடைய வேண்டும் என்றுவிரும்பிய மேய்ப்பரானவர், ஒரு கிழமை நாளிலேஅவனை தொலை பேசி வழியாக தொடர்பு கொண்டார். மேய்ப்பரானவர்: தம்பி, நாளைக்கு நாங்கள் அடுத்த கிரமாத்திற்கு சென்று, அங்கு ஒரு உதவித்திட் டத்தை நடத்தப் போகின்றோம், நீயும் வந்தால் என்ன என்றார்? அதற்கு அவன்: ஐயா, எனது பாடசாலையில் நாளைக்கு முக்கியமான பாடங்களை கற்றுக் கொடுப்பார்கள் எனவே நான் நாளைக்கு வரமுடியாது என்றான். அதற்கு மேய்ப்பரானவர்: நாங்களும் மிக முக்கியமான அலுவலாக செல் கின்றோம். அங்குள்ள ஏழைகளின் வீடுகளை புனர்நிர்மாணம் செய்ய உதவி செய்யப் போகின்றோம், ஒரு நாள் நீ பாடசாலைக்கு செல்லாதிருந்தால் என்ன என்றார்? அதற்கு அவன்: இந்த பாடம் நிச்சயமாக இறுதிப்பரீட்சைக்கு வரும் எனவே அதில் ஒரு நிமிடத்தைக்கூட தவற விடக்கூடாது என்றான். அதற்கு மேய்பரானவர்: தம்பி, ஆறு மாதங்களுக்கு பின்வரவிருக்கும் பரீட்சைக்கு இத்தனை ஆயத்தங்கள் செய்கின்றாய். ஆனால், நித்திய ஜீவனை நோக்கிய பயணத்திற்குரியவைகளை கற்றுக் கொள்வதில், கிழமைக்கு இரண்டு மணிநேரங்கள் செலவிடுவதைக் குறித்து நீ மிகவும் அசட்டையுள்ளவனாக இருக்கின்றாயே? என்று அவனிடம் கூறினார். பிரியமானவர்களே, அந்த வாலிபன் மட்டுமல்ல, இன்று வயது வந்த பலரும் இவ்வண்ணமாகவே, நித்திய ஜீவனுக்குரிய வார்த்தைகளை கற்றுக் கொள்வதை அற்பமானதாக எண்ணுகின்றார்கள். அதனால், சோதனையின் நாட்களிலே சத்துருவின் கண்ணியிலே அகப்பட்டு, வாழ்வின் சமாதானத்தை இழந்து போய்விடுகின்றார்கள். நீங்களோ விழிப்புள்ளவர்களாக நடந்து கொள்ளுங்கள்.

**எபேசியர் 5:16**

**நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள்.**

**ஜெபம்:** நித்திய ஜீவனுக்கென்று என்னை அழைத்த தேவனே, நான் மதியற்றவர்களை போல நடந்து கொள்ளாமல், கர்த்தருடைய சித்தம் இன்னதென்று உணர்ந்து வாழும் வாழ்க்கை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# இலக்கை அடையும் வரைக்கும்...

**பிலிப்பியர் 3:12**

**நான் அடைந்தாயிற்று, அல்லது முற்றும் தேறின வனானேன் என்று எண் ணாமல்,**

ஒரு ஊரிலே வாழ்ந்த வைத்தியரானவர், அநேக வருடங்களாக அந்த ஊரிலே பணி புரிந்து வந்தார். அவர் மிகவும் அனுபவமிக்க வைத்தி யராக இருந்தபோதும், தன்னிடம் வரும் நோயாளிகளை அநேக வருட ங்கள் அறிந்திருந்தபோது, ஒவ்வொரு முறை அவர்கள் வைத்தியரை சந்திக்க செல்லும்போது, அவர் தவறால் அடிப்படை பரிசோதனைகளை செய்வது வழக்கமாக இருந்தது. நான் வைத்திய துறையிலே பாண் டித்தியம் பெற்றவன். இத்தனை தக மைகள் எனக்கு உண்டு. அநேகமா யிரம்நோயாளிகளைநான் சந்தித் திரு க்கின்றேன். எனவே எனக்கு எல்லாம் தெரியும் என்று அடிப்படையான காரி யங்களை பாராமுகமாக விட்டுவிடுவ தில்லை. அதுபோலவே நித்திய ஜீவனை நோக்கி சென்று கொண் டிருக்கும் நாம், இந்த பூவுல வாழ்க்கையிலே எத்தனை வருடங்கள் வாழ்ந்தாலும், தகமைகள் அநேகம் இருந்தாலும், அனுபமிக்கவர்களாக இருந்தாலும், இந்த உலகிலே நாம் வாழும்வரை அடிப்படையான காரி யங்களை விட்டுவிட முடியாது. நம்மை நோக்கி ஒரு போராட்டம் வரும் போது, இப்படியாக எத்தனை போராட்டங்களை சந்தித்திருக்கின் றேன். இதை நான் இலகுவாக மேற்கொள்வேன் என்று தேவனுடைய வழி நடத்துதலை பெற்றுக்கொள்வதை விட்டுவிட கூடாது. மோசே என்னும் தீர்க்கதரிசியானவன் கர்த்தருடைய வீட்டில் எங்கும் அவன் உண்மையு ள்ளவனாக இருந்தான். கர்த்தர் அவனுடன் மறைபொருளாக அல்ல, முகமுகமாகவும் பிரத்தி யட்சமாகவும் பேசுனார். அவன் கர்த்தரின் சாயலைக் காண்கிறான் என்று கர்த்தர் அவன் சார்பில் சாட்சி பகிர்ந்தார் (எண் 12:8). அவன் 40 வருட ங்கள் தன் ஜனங்களை நடத்திச் சென்ற போதும், ஒவ்வொரு சந்தர்ப்ப த்திலும் கர்த்தருடைய வழிநடத்துதலை அவன் நாடி நின்றேன். நாம் எதிர் நோக் கும் ஒவ்வொரு சூழ்நிலைகளையும் தேவனுடைய வார்த்தையின் வெளி ச்சத்தில் சோதித்துப்பார்த்து நலமானதைப் பிடித்துக்கொள்ள வேண்டும். நான் அடைந்தாயிற்று அல்லது முற்றலும் தேறினவனானேன் என்று கூறி அனுதின வேத தியானத்தை விட்டுவிட முடியாது. ஊக்கமாக ஜெபிப்பதையும், சபைகூடிவருதலைவிட்டுவிடமுடியாது. கிறிஸ்துவிலே நிலைத்திருந்து வாழ்ந்து வந்த நாம், இனி நம் பெலத்தி னால் எல்லா வற்றையும் செய்வோம் என்று எண்ணம் கொள்ளக்கூடாது. எனவே வேதவாக்கியங்களை அற்பமாக எண்ணாமல், இந்த பூமியிலே வாழும் வரை அவைகளின் வெளிச்சத்திலே வாழ பழகிக்கொள்வோமாக.

**ஜெபம்:** பரலோக தேவனே, எல்லாம் அறிந்தவன், என்ற மனநிலையை அடையாதபடிக்கு, உம்முடைய வார்த்தையின் வெளிச்சத்தில் எப்போதும் வாழ உணர்வுள்ள இருயத்தை தந்து நடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

புதன் | ஆடி 19

📖 மாலை வாசகம் – யோசுவா 9:1–19

# விழிப்புடன் தரித்திருங்கள்

தீர்க்கதரிசியாகிய மோசேயானவன் மரித்துப்போன பின்பு, யோசுவா தேவ ஜனங்களை வழிநடத்தி, யுத்தங்களிலே வெற்றிபெற்று வந்தான். எரிகோ ஆயிஎன்னும் பட்டணங்களை யோசுவா மேற்கொண்டதை கேள் விப்பட்ட எதிரிகளாகிய கிபியோனின் குடிகள் ஒரு தந்திரமான யோச னைபண்ணினார்கள். அவர்கள் கானான் தேசத்திலே குடியிருந்தும், தங் களை தூரதேசத்தில் இருந்து வரும் ஸ்தானா பதிகள்போலக் காண்பித்து, பழைய இரட்டுப்பைகளையும், பீறலும் பொத்தலு மான பழைய திராட்சரசத் துருத்திகளையும் தங்கள் கழுதைகள் மேல் வைத்து, பழுதுபார்க்கப்பட்ட பழைய பாதரட்சைகளைத் தங்கள் கால்களில் போட்டு, பழைய வஸ்திர ங்களை உடுத்திக்கொண்டார்கள் வழிக்கு அவர்கள் கொண்டுபோன அப்பமெல்லாம் உலர்ந்ததும் பூசணம் பூத்ததுமாயிருந்தது. அவர்கள் யோசுவாவினிடத்தில் போய், அவனையும் இஸ்ரவேல் மனுஷரையும் நோக்கி: நாங்கள் தூரதேசத்திலிருந்து வந்தவர்கள், உம்முடைய தேவ னாகிய கர்த்தருடைய செயல்களை கீர்த்தியையும், அவருடைய செய ல்களையும் கேள்விப்பட்டு, அடிமைகளாக உம்மிடத்தில் வந்தோம் எனவே எங்களோடே உடன்படிக்கைபண்ணுங்கள் என்றார்கள். அப் பொழுது இஸ்ரவேலர்: கர்த்தருடைய வாக்கைக் கேளாமல் அவர்க ளுடைய வார்த்தைகளை கேட்டு, அவர்களோடுசமாதானத்தின் உடன்ப டிக்கையை பண்ணினார்கள். அவர் களோடே உடன்படிக்கைபண்ணி, மூன்றுநாள் சென்றபின்பு, அவர்கள் தங்கள் அயலார் என்றும் தங்கள் நடுவே குடியிருக்கிறவர்கள் என்றும் கேள்விப்பட்டார்கள். ஆனால், கர்த் தரை கேளாமல், கர்த்தர்பேரில் ஆணை யிட்டுக் கொடுத்ததால், எதிரி களை அவர்கள் பாதுகாக்க வேண்டிய தாயிற்று. பிரியமானவர்களே, நம்முடைய வாழ்விலும் நம்மை நோக்கி வரும் சூழ்நிலைகளை மாம்ச கண்களால் பார்த்து, தீர்மானங்களை எடுக்காமல், கர்த்தருடைய வார் த்தையின் வெளிச்சத்திலே நாம் அவைகளை ஆராய்ந்து பார்க்க வேண் டும். முன்பு பல போராட்டங்களை வென்றேன் என்பது போதாது. இந்தப் போராட்டத்தையும் மேற்கொள்ளுதவற்கு நமக்கு தேவனுடை துணை இன்றியமையாதது. நம்மை சகல சத்தியத்திலும் வழிநத்திச் செல்லு ம்படி துணையாளராகிய சத்திய ஆவியானவர் நம்மோடு இருக்கின்றார். எனவே, அவருடைய வழிநட த்துதலுக்கு இடங்கொடுப்போமாக.

**யோவான் 16:13**

**சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தி யத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்**

**ஜெபம்**: வழிநடத்தும் தேவனே, என்னுடைய எண்ணத்தின்படி நான் எதையும் செய்யாதபடிக்கு, உமக்கு பிரியமானதை செய்து, உம்முடைய சித்தத்திற்கு இடங்கொடுக்கும் உணர்வுள்ள இருதயத்தை தந்து நடததிச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# புத்தியுள்ள ஆராதனை

தகப்பனானவருடைய அறுபதாவது பிறந்தநாள் விழாவை, பிள்ளைகள் வெகு விமர்சையாக கொண்டாடினார்கள். உற்றார், உறவினரை வரவழைத்து, மேளதாளங்களுடன், தகப்பனானவரை மாலைகள் போட்டு வரவேற்றார்கள். பலர் முன்னிலையிலே சிறப்புரைகளை ஆற்றினார்கள். பல வெகுமதிகளை கொடுத்தார்கள். விருந்தாளிகளுக்குசிறப்பு விருந்தை ஆயத்தப்படுத்தி, பாடல்கள் நடனங்களோடுஇரவைகளித்தார்கள். ஆனால், தகப்பனானவருடைய மனதிலே தன்னுடைய பிள்ளைகளின் வாழ்க்கை முறையைக் குறித்து சற்றேனும் திருப்தியில்லை.பிள்ளைகள் கல்வி கற்று, நல்ல உத்தியோகங்களை செய்து, வீடுவாசல்களோடு வாழ்ந்த போதும், அவர்கள் பெற்றோரின் ஆலோசனைகளை தள்ளிவிட்டு, தங்கள் கண்போன வழியிலே நடந்து வந்தார்கள். இந்த கொண்டாட்டங்கள் எல்லாம் பிள்ளைகள் தங்கள் வாழ்க்கைத் தரத்தை ஊருக்கு உலகுக்கும் வெளிக்காட்டும் வெளிவேஷம் என்று தகப்பனானவர் அறிந்திருந்தார். ஆனால், பிள்ளைகளுடைய மனதிலேயோ, தாங்கள் ஏற்படுத்திய பெரிதான விழாவைக் குறித்து பெருமிதம் அடைந்தா ர்கள். பிரியமான சகோதர சகோதரிகளே, இன்றைய உலகிலே, தங்கள் தங்கள் விருப்பம்போல், பல விதமாக துதி ஆராதனைகளை தேவாதி தேவனுக்கு செலுத்து வருகின்றார்கள். நேர்த்தியான இசைக் கருவிகளை இசைத்து, அழகான மேடைகளிலே, அநேக காரியங்களை நடப்பிக்கின்றார்கள். எவரையும் நியாயந்தீர்ப்பது நம்முடைய வேலையல்ல ஆனால் நாம் ஒவ்வொருவரும் செய்யும் ஆராதனைகளிலே யார் திருப்தியடைகின் றார்கள் என்பதைக் குறித்து நாம் எண்ணமுள்ளவர்களாக இருக்க வேண்டும். தேவனுடைய வார்த்தையின் வழியிலே வாழ்க்கையை வாழாமல், நாம் ஏறெடுக்கும் எந்த துதிப் பலிகளிலும் தேவனுக்கு சுகந்த வாசனையாக இருக்குமோ? தேவன் தாமே, என் உட்காருதலையும் என் எழுந்திருக்குதலையும் அறிநதிருக்கின்றார். என் நினைவுகளைத் தூரத்திலிருந்து அறிக்கின்றார். நான் நடந்தாலும் படுத்திருந்தாலும் என்னைச் சூழ்ந்திருக்கின்றீர் என் வழிகளெல்லாம் அவருக்கு தெரியும். எனவே, நமக்கு ஏற்புடைய துதியையல்ல, மனுஷக்கு பிரியமான ஆராதனைகளை அல்ல, புதிய வர்களை கவரும் பாடல்களையல்ல, தேவனுக்கு பிரியமானதும், அவருக்கு ஏற்புடையதுமான துதி ஆராதனையை அவருக்கு செலுத்துவோமாக.

**ரோமர் 12:1**

**நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவ பலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று**

**ஜெபம்:** என் தேவனாகிய கர்த்தாவே, உமக்கு அருவருப்பான ஆராதனையை நான் செய்யாமல், உம்முடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து, உமக்கு பிரியமான வாழ்க்கை வாழும்படிக்கு எனக்கு உணர்வுள்ள இருதயத்தைத் தந்தருள்வீராக.இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# பிரியமுள்ள ஆராதனை

எளிமையான வாழ்க்கை வாழ்ந்து வந்த ஒரு மனிதனானவனின் பிள்ளைகள், வயது சென்ற தங்கள் தந்தையாரை மிகவும் அன்பு செய்தார்கள். அவர்களுக்கு படித்து பட்டம் பெறுவதற்கு எந்த வசதிகளும், வளங்கள் ஏதும் இருந்ததில்லை. ஆனால், அவர்களுடைய தந்தையார் அவர்களை, சின்ன வயதிலிருந்தே தேவனுடைய வழியிலே நடத்தி வந்தார். தேவபயம் என்றால் என்ன? எப்படி மெய்ஞானத்தை பெற்றுக்கொள்வது என்பதைக் குறித்து அவர்களுக்கு நன்றாக போதித்து, வழிகாட்டி வந்தார். அவர்களுக்கு பெரிதான வருமானம் இல்லாதிருந்தும், தாங்கள் கஷ்டப்பட்டு உழைத்து சம்பாதிக்கும் வருவாயில், ஒருபகு தியை தங்கள் தந்தையாரின் விசே ஷித்த பிறந்த தினத்திற்காக சேர்த்து வந்தார்கள். குடும்பத்தினராக சேர் ந்து ஒரு சிறிய விருந்தை செய்து தங்கள் தந்தையாரை மகிழ்விப்பதற்காக, பல தியாகங்களை செய்ய வேண்டியாதாயிருந்தது. பெரிதான விருந்துசாலையோ, இடாம்பீகரமான கொண்டாட்டங்களோ, பெரிதான பரிசுப் பொருட்களோ இல்லை. ஆனால், பிள்ளைகளின் உண்மை யான அன்பைக் குறித்து தந்தையார் மிகவும் மகிழ்ச்சியடைந்தார். ஆம் பிரியமானவ ர்களே, நம்முடைய பரம பிதாவும், பெரும் பெரும் காரியங்களை நம்மிடம் எதிர்பார்ப்பதில்லை. பூமியும் அதின் நிறைவும், அதன் குடிகளும் கர்த்தருடையது. அவர் தாமே பெரியவராக இருந்தும், நம்முடைய இருதயத்தை நோக்கிப் பார்க்கின்றார். உண்மையுள்ள இருயதத்திலிருந்து வரும் துதி ஆராதனையில் அவர் பிரியப்படுகின்றார். மற்றவர்கள் பெரிய காரியங்களை செய்கின்றார்கள் எனவே நானும் அப்படி செய்ய வேண்டும் என்று பெரும் காரியங்களை செய்வதைக் குறித்து மனதில் அலட்டிக் கொள்ளாமல், தேவன் தந்த பெலத்தின்படி, செய்கின்ற காரியத்திலே உண்மையுள்ளவர்களாக இருங்கள். நீங்கள் ஆராதிக்கக் கூடும் ஸ்தலம் சிறிய குடிசையாக இருந்தாலும், அதைக் குறித்து கவலையடையாமல், தேவபயத்தோடு வாழுங்கள். தேவன் முன்னிலையில் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுது கொள்ளுங்கள். மனிதர்களுக்கு பிரியமான ஆராதனையை செய்யாமல், தேவனுக்கு பிரியமான ஆராதனை செய்யுங்கள்.

**வெளிப்படுத்தல் 3:8**

**உனக்குக் கொஞ்சம் பெலன் இருந்தும், நீ என் நாமத்தை மறுதலியாமல், என் வசனத்தைக் கைக்கொண்டபடியினாலே, இதோ, திறந்த வாசலை உனக்கு முன்பாக வைத்திருக்கிறேன்,**

**ஜெபம்:** சுகம் தரும் தேவனே, ஆண்டுகள் கடந்து சென்றாலும் நான் உம் மேல் கொண்டுள்ள விசுவாசத்திலே தளர்ந்து போய்விடாதபடிக்கு என் குறைவுகளிலே நீரே நிறைவாக இருந்து என்னை வழிடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# உங்கள் வாழ்வின் மேன்மை என்ன?

ஒரு கிடாய் ஆடானது அங்குமிங்குமாக கட்டுமீறி ஓடித்திரிந்ததால், சேற்றும் சதுப்பு நிலமுமான ஒரு இடத்திலே அகப்பட்டுவிட்டது. அந்த ஆடானது, சேற்றிலே கொஞ்சம் கொஞ்சமான புதைந்து கொண்டு இருந்தது. அந்த இடத்திலிருந்து தப்பித்துக் கொள்ள வழியேதும் இல்லை என்று உணராமல், நான் ஒரு கிடாய் ஆடு என்று பெருமையோடு நின்ற காட்சியானது, பார்ப்பதற்கு மிகவும் பரிதாபமாக இருந்தது. அது புதைந்து கொண்டு போகும் போது, என்னுடைய கொம்பைப் பார், சேற்றுக்கு மேலாக உறுதியாக என் தலையில் இருக்கின்றது என்று பெருமை பாராட்டியதாம். பிரியமானவர்களே, இன்றும் பல மனிதர்கள் அந்த கிடாய் ஆட்டைப் போலவே, மனிதகுலமானது பாவ சேற்றிலிருக்கின்றது என்றும், அந்த அழிவிலிருந்து விடுதலையடைய வேண்டும் என்பதை சற்றேனும் உணரால், தங்கள் குடும்ப பின்னணியையும், வம்சவரலாறுகளையும், தங்கள் மத நம்பிக்கைகளையும் குறித்து மேன்மை பாராட்டிக் கொண்டிருக்கின்றார்கள். சில வேளைகளிலே, சில தேவ பிள்ளைகளும், ஒவ்வொருவரும் தனிப்பட ஆண்டவர் இயேசுவினால் உண்டான இரட்சிப்பை பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதை மறந்து, தாங்கள் பரம்பரை பரம்பரையாகவே சிறப்பு குடி மக்கள் என்றும், மற்றவர்களைப் போல பாவிகள் அல்ல என்றும் தம்மைக் குறித்து பெருமைபாராட்டிக் கொள்கின்றார்கள். ஆண்டவராகிய இயேசு இந்த உலகிலே இருந்த நாட்களிலும், பரிசேயர், சதுசேயர், வேத வல்லுஞர்கள், ஆசாரியர்கள் பலர், இவ் வண்ணமாகவே தங்கள் பின்னணியைக் குறித்து மேன்மைபாரட்டி வந்தார்கள். தேவ மனுஷனாகிய யோவான் ஸ்நானன் அவர்களை நோக்கி: “ஆபிரகாம் எங்களுக்குத் தகப்பன் என்று உங்களுக்குள்ளே சொல்லிக் கொள்ள நினையாதிருங்கள் தேவன் இந்தக் கல்லுகளினாலே ஆபிரகாமுக்குப் பிள்ளைகளை உண்டுபண்ண வல்ல வராயிருக்கிறார்” என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். ஆனால், ஊரிலுள்ள பாமர ஜனங்களில் பலர், தங்கள் அவல நிலைமையை உணர்ந்தவர்களாக, பாவ சேற்றிலிருந்து விடுதலையை பெற்றுக் கொள்ளும்படி ஆண்டவர் இயேசுவை தேடிச் சென்றார்கள். தங்களை தாழ்த்தி மனந்திரும்புதலுக்கேற்ற கனியை கொடுத்தார்கள். இரட்சிப்பை பெற்றுக் கொண்டார்கள். எனவே, நம்மிடமிருக்கும் எந்த காரியத்தைக் குறித்தும் நாம் மேன்மைபாராட்டிக் கொள்ளாமல், கர்த்தருக்கு முன்பாக நம்மை தாழ்த்தி, அவர் தரும் மீட்பை பெற்று, நித்திய ஜீவனை பெறும்படி முன்னேறிச் செல்வோமாக.

**மத்தேயு 3:8**

**மனந்திரும்புதலுக்கு ஏற்ற கனிகளைக் கொடுங்கள்**

**ஜெபம்**: என் நிலையை நன்றாக அறிந்த தேவனே, இந்தப் பூமியிலே நான் எதைக் குறித்தும் மேன்மைபாராட்டாதபடிக்கு, என் நிலைமையை உணர்ந்து உம்மை கிட்டிச் சேர உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# சுபாவங்களை ஆராய்தறியுங்கள்

குறிப்பிட்ட சபையைச் சேர்ந்த வாலிபர்கள், சபையோருக்கு விழிப்புணர்வை உண்டுபண்ணும்படிக்கு ஒரு நாடகத்தை நடித்து காண்பித்தார்கள். அதன்படிக்கு, தன்னை நீதிமான் என்று கூறிக் கொள்ளும் மனிதனானவன், தன்னுடைய பக்தியுள்ள வாழ்க்கையை குறித்து கூறும் போது: "என்னிடம் குடிவெறி, புகைத்தல் போன்ற தவறான பழக்கங்களில்லை. நெறிகெட்ட திரைப்படங்களையோ, இன்ரநெற் ஊடகங்கள் வழியாக வரும் தகுதியற்ற காட்சிகளையோ பார்ப்பதில்லை. எவரோடும் சண்டைக்கோ, வாக்குவாதங்களுக்கோ போனதில்லை. என்னிடம் எரிச்சல் இல்லை. பொறாமை இல்லை. அநியாயம் செய்வதில்லை. உபவாசிக்கின்றேன், ஜெபிக்கின்றேன், தான தர்மங்களை செய்து வருகின்றேன்" என்று தன்னுடைய வாழ்க்கையின் சாதனைகளை பட்டியல் படுத்திக் கொண்டிருக்கும் போது, சாத்தனானவன் அவனுடைய வீட்டிற்கு வந்தான். அதைக் கண்ட அந்த மனிதனானவன் சாத்தானாவனை நோக்கி: உனக்கிங்கே என்ன வேலை? உன்னுடைய தொன்றும் என்னிடம் இல்லை என்று சாத்தானை விரட்டிவிடப் பார்த்தான். அதற்கு சாத்தானவன் அவனை நோக்கி: உன்னிடம் பல குறைகள் இல்லை. ஆனால் என்னுடைய பிரதானமான சுபாவம் உன்னிடம் இருக்கின்றதே,நான் இங்கு வருவதற்கு அது எனக்கு போதும் என்றான். அதற்கு அந்த மனிதனானவன் கோபத்துடன்: எனக்கும் உனக்கும் கணக்குவழக்கு ஏதும் இல்லை. அப்படி உன்னுடைய சுபாவம் ஒன்றும் எனக்குள் இல்லை என்று கூறினான். அதற்கு சாத்தானானவன்: உன்னிடத்தில் பெருமை இருக்கின்றே. அது என்னுடையது என்றான். இப்படியாக ஒரு சுவாரசியம் நிறைந்த, கருத்துள்ள நாடகத்தை நடித்துக் காண்பித்தார்கள். பிரியமானவர்களே, தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார். சில வேளையிலே, சில தேவ பிள்ளைகள் கூட தங்களை அறியாமல், தங்கள் கிரியைகளினாலே தங்களை நீதிமான்களாக காண்பிக்க முற்படுகின்றார்கள். இத்தகைய மேன்மைபாரட்டுதலினால், பெருமையை தங்கள் உள்ளத்திலே வளர்த்துக் கொள்கின்றார்கள். நாம் நம்முடைய நற்கிரியைகளைக் குறித்து மேன்மைபாராட்டாதபடிக்கு, தம்முடைய திருச்சித்த்ததின்படி நம்மில் விருப்பத்தையும் செய்கையையும் நம்மில் உண்டுபண்ணுகின்ற தேவனாகிய கர்த்தரின் முன்னிலையில் நம்மை தாழ்த்துவோமாக.

**யாக்கோபு 4:10**

**கர்த்தருக்கு முன்பாகத் தாழ்மைப்படுங்கள், அப்பொழுது அவர் உங்களை உயர்த்துவார்.**

**ஜெபம்:** என் தேவனாகிய கர்த்தாவே, நான் உம்முடைய திருக்கரத்தின் கருவி என்பதை உணர்ந்து, உம்முடைய சமுகத்தில் எப்போதும் தாழ்மையுள்ளவனாக இருக்க நீர் கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# நிஜமான வாழ்க்கை

பார்த்தவர்கள் யாவருமே அருமையான நாடகம்! கதாபாத்திரமாக நடித்தவன்மிகவும் சிறப்பாக நடித்தான்! என்றும் ஆண்டவராகிய இயேசுவின் பாடுகளையும், மரணத்தையும் குறித்து குறுந்திரை நாடகத்தையும் குறித்து பலரும் தங்களுக்குள் பேசிக் கொண்டார்கள். ஆண்டவர் இயேசுவைப் போல நடித்தவனின், இராப்போஜனத்திற்கு முன்பு, கர்த்தர் சீஷர்களுடைய கால்களை கழுவியது போல, தானும் கழுவினான். அந்தக் காட்சி மிகவும் உணர்ச்சிகரமாக இருந்தது. ஆனால், அந்தக் காட்சிக்கும் அதை நடித்தவனுடைய நிஜமான வாழ்க்கை அப்படிப்பட்டதல்ல. நடிப்பவர்கள், பணத்திற்காகவும், பெயருக்காகவும், புகழுக்காகவும் தங்கள் ரசிகர்களின் மனதை கவர்ந்து கொள்ள எதையும் நன்றாக நடித்துக் காண்பிப்பார்கள். ஆனால் கிறிஸ்துவின் சாயலிலே வளரும் வாழ்க்கையை நாம் நடித்து காண்பிக்க முடியாது. அது நம்முடைய நிஜமான வாழ்க்கையாக இருக்க வேண்டும். மேடைகளிலும், திரை அரங்கிலும் மாத்திரமல்ல, சில மனிதர்கள், தங்கள் சொந்த வாழ்க்கையையும் நாடகமாக்கிக் கொள்கின்றார்கள். அதனால் ஒருவேளைசில மனிதர்களுடைய இருதயங்களை இவர்கள் கவர்ந்து கொள்ளலாம். ஆனால், இருதயத்தை ஆராய்ந்தறிகின்ற தேவனாகிய கர்த்தரின் முன்னிலையிலே அது மாய்மாலம் பண்ணுவதாக இருக்கும். மனுஷர் காணவேண்டுமென்று அவர்களுக்கு முன்பாக உங்கள் தர்மத்தைச் செய்யாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள் செய்தால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவினிடத்தில் உங்களுக்குப் பலனில்லை. ஆகையால் நீ தர்மஞ்செய்யும்போது, மனுஷரால் புகழப்படுவதற்கு, மாயக்காரரர் ஆலயங்களிலும் வீதிகளிலும் செய்வது போல, உனக்கு முன்பாகத் தாரை ஊதுவியாதே. அவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்ததென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். நீயோ தர்மஞ் செய்யும்போது, உன் தர்மம் அந்தரங்கமாயிருப்பதற்கு, உன் வலது கை செய்கிறதை உன் இடது கை அறியாதிருக்கக்கடவது என்று நம்முடைய ஆண்டவராகிய இயேசு கூறியிருக்கின்றார். கருப்பொருளாவது, நாம் தேவனுக்கென்று செய்யும் நற் கிரியைகள் முதலாவதாக தேவனால் அங்கீகாரம் பெற்றிக்க வேண்டும். அதை பெறுவதற்கு நம்முடைய இருதயம் தேவனுக்கு ஏற்புடையதாக இருக்க வேண்டும்.

**சங்கீதம் 24:4**

**கைகளில் சுத்தமுள்ளவனும் இருதயத்தில் மாசில்லாதவனுமாயிருந்து, தன் ஆத்துமாவை மாயைக்கு ஒப்புக்கொடாமலும், கபடாய் ஆணையிடாமலும் இருக்கிறவனே.**

**ஜெபம்**: என் இருதயத்தின் தியானங்களை அறிந்த தேவனே, மனிதர்களுடைய அங்கீகாரத்தை பெறுவதைவிட உம்முடைய அங்கீகாரத்தை பெறும்படியாகவே நான் உண்மையுள்ள வாழ்க்கை வாழ கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# நாம் பெற்றிருக்கும் பாக்கியம்

ஒரு பெரிய மாளிகையிலே வாழ்ந்து வந்த ஐசுவரியவான்னுடைய, படுக்கை அறையானதுமிகவும்சிறப்பாக அலங்கரிக்கப்பட்டு, படுக்கை அறைக்கேயுரிய அழகானதும், மங்கலானதுமான மின்குமிழ்கள் பொருத்தப்பட்டிருந்தது. விலையுயர்ந்தமரத்தினாலே செய்யப்பட்ட கட்டில், அதன்மேல் உடல்ஆரோக்கியத்திற்கென பிரத்தியேகமாக செய்யப்பட்ட மெத்தையானது போடப்பட்டிருந்து. அவன்படுக்கைக்குச் செல்லும் போது அவன் நித்திரைக்கு செல்வதற்காகவே அணிவதற்கென விசேஷித்த படுக்கை உடைகள் இருந்தது. இப்படியாக அவன் நித்திரை செய்வதற்கென பல ஆயத்தங்கள் செய்யப்பட்டிருந்தது. ஆனால், அவனுக்கோ நிம்மதியான நித்திரை வருவதில்லை. அதனால் அவன் மனதிலே அவனுக்கு நிம்மதியில்லை. தெருவின் அப்புறமாக, தேவனுக்கு பயந்து வாழும் குடியானவனொருவன் ஒரு ஓலைக் குடிசையிலே வாழ்ந்து வந்தான். அவன் தன் பிழைப்புக்காக அந்த ஐசுவரி யவானின் வீட்டிலே நாளாந்த கூலிவேலை செய்து வந் தான். மாலை யிலே தன் வேலையை முடித்ததும், அவன் குளித்த ஆகா ரம் உண்ட பின்னர், தன் பாயை விரித்து, அதிலே நிம்மதியாக படுத்து உறங்கி வந்தான். அவனிடத்திலே செல்வச் செழிப்பு ஏதும் இல்லை ஆனாலும் அவன் மனதிலே நிம்மதியிருந்தது. எனினும் அந்த குடியானவன், ஐசுவரியவானின் வாழ்க்கையைப் பார்த்து, தன் நிலைமையை குறித்து ஏங்கின நாட்கள் உண்டு. அந்த ஐசுவரியவானவன் நிம்மதியாக வாழ வேண்டும் என்று ஊக்கமாக கல்வி கற்று, கடுமையாக உழைத்து வந்தான். இந்த உலகத்தின் செல்வத்தையும், செழிப்பையும் பெற்றுக் கொண்டான். ஆனால் அவன் தான் அடைய வேண்டும் என்ற நிம்மதியானவாழ்க்கையை பெற்றுக் கொள்ள முடியவில்லை. எளிமையான குடியானவன், தன்னிடம் இருக்கும் விலைமதிக்க முடியாத நிம்மதியான வாழ்க்கையை உணரால், சீரும் சிறப்புடன் காட்சியளிக்கும் வெளிப்பூச்சான குறிப்பிட்ட ஐசுவரியவானின் வாழ்க்கையை இச்சித்தான். பிரியமானவர்களே, ஆண்டவராகிய இயேசு வழியாக நாம் பெற்றிருக்கும் அருமையான வாழ்க்கையைக் குறித்து உணர்வுள்ளவர்களாக இருக்க வேண்டும். ஒருவேளை இந்த உலகத்தின் பொக்கிஷம் நம்மிடத்தில் இல்லாதிருக்கலாம். ஆனால், இயேசு கிறிஸ்துவின் முகத்திலுள்ள தேவனுடைய மகிமையின் அறிவாகிய ஒளியைத் நாம் இந்த மட் பாண்டங்களிலே பெற்றிருக்கின்றோம். அதை நாம் எல்லாக் காவலோடும் காத்துக் கொள்ளக்கடவோம்.

**2 கொரிந்தியர் 4:7**

இந்தப் பொக்கிஷத்தை மண் பாண்டங்களில் பெற்றிருக்கிறோம்.

**ஜெபம்:** அன்பின் தேவனே, இந்த உலகிலே என் பொருளாதர நிலைமை எப்படியாக இருந்தாலும், நான் உம்மிடமிருந்து பெற்றிருக்கும் பொக்கிஷத்தை காத்துக் கொள்ளும்படி எனக்கு கிருபை செய்வீராக. இரட் சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# யாருடைய விருப்பதை நிறைவேற்றுகின்றோம்?

புறதேசத்திலே வாழ்ந்து வந்த மனிதனானவனொருவன், அநேக ஆண்டுகளுக்கு பின்னர் தான் பிறந்து வளர்ந்த கிராமத்திற்கு சென்றிருந்தான். தன் இளவயதின் நண்பர்களோடும், தன் உறவினர்களோடும் நாட்களைக் களிக்க வேண்டும் என்ற ஆவலுடையவனாக இருந்தான். அவனுடைய வருகையை எதிர்பாத்திருந்த நண்பர்களும், உறவினர்களும் பரவசமடைத்தார்கள். அவனுக்காக பெரும் ஒன்றுகூடலை ஆயத்தப்படுத்துவதில் அநேகநேரத்தையும் பணத்தையும் அவர்கள் செலவிட்டார்கள். புறதேசத்திலிருந்து வந்திருக்கும் தங்கள் நண்பனை, உறவினனை கௌரவிக்க வேண்டும், சந்தோஷப்படுத்த வேண்டும் என்று பல ஏற்பாடுகளை செய்வதில் நாட்களை செலவிட்டார்கள். அதைக் கண்ட அந்த மனிதனானவன், அவர்களை அழைத்து, அவர்களை நோக்கி: எனக்கு அன்பான நண்பர்களே, உறவினர்களே, என்னை சந்தோஷப்படுத்த வேண்டும் என்று நீங்கள் எண்ணங் கொண்டிருப்பதேஎனக்கு பெரும் மனமகிழ்சியைத் தருகின்றது. ஆனால், நான் உங்களோடு, உங்கள் வீட்டிலே, முன்பிருந்தது போல நேரத்தை செலவிடுவதையே விம்புகின்றேன். அதுவே என் மனவாஞ்சை. ஆனால், நீங்களோ, என்னோடு நேரத்தை செலவிடாமல், கொண்டாட்டம் பெரிதாக இருக்க வேண்டும் என்று அதிலே அதிக பிரயாசப்பட்டு வீணாக கவலையடைகின்றீர்கள் என்று கூறினான். எனக்கு தேவையானது மிகவும் இலகுவானது. நீங்கள் என்னோடு இருப்பதையே நான் விரும்புகின்றேன் என்றான். பிரியமானசகோதர சகோதரிகளே, ஆண்டவராகிய இயேசுவிற்காக, பிரயாசப்படுகின்றோம். அவருடைய நாமத்தின் மகிமைக்காக பல தானதர்மங்களை செய்வதிலும், நற்கிரியைகளை நடப்பிப்பதிலும் கருத்துள்ளவர்களாக இருந்து வருகின்றோம். பெரிதான ஆராதனைகளை செய்கின்றோம். ஆனால், அவர் நம்மிடத்தில் விரும்பும் காரியமானது நம் மிடத்தில் உண்டா என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும். ஆண்டவர் இயேசுவோடுள்ள நம்முடைய தனிப்பட்ட உறவின் வளர்ச்சி, அவருடைய வார்த்தை நம்மில் நிலைத்திருத்தல், நாம் அவர் வார்த்தையில் நிலைத்திருத்தல் போன்ற காரியங்களை நாம் சிந்திக்க வேண்டும். நாம் விரும்பும் காரியங்களை அவருக்காக செய்வதை விட்டுவிட்டு, அவர் விரும்பும் காரியங்களை நம்முடைய வாழ்க்கையிலே நிறைவேற்றுவோமாக. அதனால், நாம் அவருடைய அன்பிலே நிலைத்திருக்கின்றோம் என்பது உறுதியாகும்.

**யோவான் 15:10**

**நீங்களும் என் கற்பனைகளைக் கைக்கொண்டிருந்தால், என்னுடைய அன்பிலே நிலைத்திருப்பீர்கள்.**

**ஜெபம்:** பிதாவாகிய என் தேவனே, நான் விரும்பிய காரியங்களை செய்வதே உம்முடைய சித்தம் என்று எண்ணாமல், உமக்கு பிரியமானவைகளை செய்ய எனக்கு கற்றுத்தந்து வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# அழியாத கனமகிமை

பரலோக மகிமையை துறந்து, தன்னைத் தாமே தாழ்த்தி, அடிமையின் ரூபமெடுத்து, இந்தப் பூவுலகில் உதித்த தேவகுமாரனாகிய இயேசு, எதற்காக வந்தார்? நம்மிடத்திலே விருந்து கொள்ளும்படி வந்தாரா? தான் பிரபல்யமடையும்படி வந்தாரா? விருந்துகளில் முதன்மையான இடங்களையும், ஜெபஆலயங்களில் முதன்மையான ஆசனங்களையும் பெற்றுக் கொள்ள வந்தாரா? சந்தைவெளிகளில் வந்தனங்களையும், மனுஷரால் போதகரே என்று அழைக்கப்படும்படி வந்தார?ஆண்டவராகிய இயேசு மனுஷரால் வரும் மகிமையை ஏற்றுக் கொள்ளுகிறதில்லை. அப்படியானால் அவர் ஏன் இந்தப் பூமிக்கு வந்தார்? ஒருவனும் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கே பிதாவாகிய தேவன் தம்முடைய திருக்குமாரனாகிய இயேசுவை இந்த பூவுலகிற்கு அனுப்பினார். இழந்தபோனதை மீட்டு இரடசிக்கவே ஆண்டவராகிய இயேசு இந்த பூமிக்கு வந்தார். பிதாவானவர் கற்பித்தபடியே அவர் பிதாவானவருடைய சித்தத்தை முழுமையாக நிறைவேற்றினார். நாம் ஏன் தேவ அழைப்பை பெற்றிருக்கின்றோம்? ஏன் வேறுபிரிக்கப்பட்டோம்? உலக மகிமையை அடையும்படிக்காகவா? மனித அங்கீகாரத்பை பெற்றுக் கொள்ளும்படியாகவா? உலகத்திலே முதன்மையான இடங்களை பெற்றுக் கொள்ளும்படிக்காகவா? நமக்கென்று ஒரு ரசிகர் கூட்டத்தை ஏற்படுத்தி, நம்முடைய எல்லைகளை விஸ்திரப்படுத்தும்படியாகவா? இல்லை, நாம் அதற்காக அழைப்படவில்லை. அப்படியானால் நாம் எதற்காக அழைக்கப்பட்டிருக்கின்றோம்? இழந்து போன தேவ சாயலை பெற்றுக் கொண்டு, நித்திய ஜீவனிலே பங்கடையும்படி அழைப்பைப் பெற்றிருக்கின்றோம். அதை நாம் பெற்றுக் கொள்ளும்படிக்கு, ஆண்டவர் இயேசுவைப் போல, நம்மைக் குறித்ததான பிதாவாகிய தேவனுடைய திருச்சித்தத்தை நம் வாழ்விலே நாம் நிறைவேற்றி முடிக்க வேண்டும். அந்தப் பாதையிலே உண்டாகும் உபத்திரவங்கள், ஈடு இணையில்லாத நித்திய கனமகிமையை நமக்கு உண்டாக்கும். இந்த உலகிலே நாம் பெற்றுக் கொள்ளும் மகிமை இந்த உலகத்தினால் உண்டானதினால் அது உலத்தோடு அழிந்து போய்விடும். ஆனால் பிதாவாகிய தேவன்தாமே நித்திய கனமகிமையை நமக்கு தந்தருள்வார். அது ஒருக்காலும் அழியாதது. எனவே நாம் அழியாத நித்திய கனமகிமையையே வாஞ்சித்து தேடுவோமாக.

**2 கொரிந்தியர் 4:18**

**ஏனெனில், காணப்படுகிறவைகள் அநித்தியமானவைகள், காணப்படாதவைகளோ நித்தியமானவைகள்.**

**ஜெபம்:** நித்திய மகிமையை நான் அடையும்படிக்கு உம்முடைய திருக்குமாரனை அனுப்பிய தேவனே, இந்த உலகத்தினால் உண்டானவைகளை தேடாமல், பரலோக மகிமையை வாஞ்சிக்கும் உள்ளத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# நான் இதை விதைக்கவில்லையே?

ஒரு வீட்டின் பின்புறத்தில், பக்கத்து வளவிற்குள் இருந்த மாமரமானது பூத்து, காய்த்து, கனிந்திருந்தது. கனிந்த பழங்கள் சில தன்னுடைய வளவிற்குள்ளும் விழுந்திருப்பதை வீட்டின் சொந்தக்காரன் கண்டான். ஆனால், அதை பறவைகள் சாப்பிட்டிடும் என்று பராமுகமாக விட்டுவிட்டான். சில மாதங்களுக்கு பின், தன்னுடைய வளவிற்குள் சிறிய மாங்கன்றுகள் முளைத்திருப்பதை கண்டான். மாங்கன்றுகள் முளைக்கட்டும், வேறுயாருக்கும் அதை கொடுக்கலாம் என்று தன் உள்ளத்திலே சொல்லிக் கொண்டான். இப்படியோக அவன் பல அலுவல்களில் ஈடுபட்டிருந்ததால், அதை கவனியாதிருந்த போது, அந்த மாங் கன்றுகளில் ஒன்று வளர்ந்து பெரிய மரமாயிற்று. பூத்து, காய்த்து, கனி கொடுத்தது. அந்தக் கனியை அவன் சுவைத்த போது, மிகவும் புளிப்புள்ளதாகவும், புசிப்பதற்கு ஆகாததுமாக இருக்கக் கண்டான். இது எப்படி ஆயிற்று என்று ஆச்சரியப்பட்டான். பக்கத்து வீட்டில் இருந்து தன்னுடைய வீட்டிற்குள் விழுந்த சில விதைகளை பாராமுகமாக விட்டதாலேயே, அப்படியாயிற்று என்று உணர்ந்து கொண்டான். பிரியமான சகோதர சகோதரிகளே, இவ்வித மாகவே, சில மனிதர்களின் வாழ்க்கையில் வளர்ந்து பெருகி இருக்கும் கசப்பானது, மற்றய மனிதர்களின் வாழ்க்கையிலே உண் டாகிவிடுகின்றது. அந்த மனிதர்கள், ஒருவேளை சக வேலையாட் களாகவோ, நண்பர்களாவோ, உறவினர்களாவோ, குடும்பத்தாராகவோ அல்லது சக விசுவாசிகளாகவோ இருக்கலாம். அவர்கள் தங்கள் வாழ்வில் உண்டாயிருக்கும் கசப்பைக் குறித்து உணர்வற்றவர்களாகவே வாழ்கின்றார்கள். இது அவர்களுடைய உணர்வற்ற வாழ்க்கை. அந்தக் கசப்பை அறிந்தோ அறியாமலோ, எப்படியாவது மற்றவர்களுடைய இருதயங்களிலே அவர்கள் விதைத்து விடுகின்றார்கள். எக்காரணம் கொண்டு, நாம் அவற்றை நம்முடைய இருதயமாகிய நல்ல நிலத்திலே விழுந்து முளைப்பதற்கு இடங் கொடுக்கக்கூடாது. கசப்பையும் பிரிவினையையும் உண்டாக்கும் வார்த்தைகளை பேசும் மனிதர்களை குறித்து எச்சரிக்கையாய் இருங்கள். அந்த வீட்டுச் சொந்தக்காரன், தன் வளவிற்குள் விழுந்து மாங்கனிகளை பாராமுகமாகவிட்டுவிட்டதுபோல நீங்கள் விட்டு விடாதபடிக்கு எப்போதும் விழிப்புள்ளவர்களாக இரு ங்கள். கசப்பான விதைகள் பிரிவினையாகிய பெருவிருட்சமாக வள ரும். முடிவிலே அது நம்மை தேவனோடுள்ள உறவிலிருந்து பிரித்துப் போடும்.

**கலாத்தியர் 6:7**

**மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்.**

**ஜெபம்:** புதிய வாழ்வைத் தந்த தேவனே, நான் என் உள்ளத்தில் கசப்பான விதைகள் விழுந்து வளர்வதற்கு இடங் கொடுக்காமல், எச்சரிக்கையான வாழ்க்கை வாழ்வதற்கு எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# உன்னதமானவரின் பிள்ளைகள்

தாங்க முடியாத மனவேதனை! சொல்ல முடியாத மனச்சோர்வு! நான் ஓடின ஓட்டம் என்ன. மற்றவர்களின் நன்மைக்காக பட்ட பிரயாசங்கள் எத்தனை எத்தனையோ. கைமாறு கருதாமல், தற்புகழை நாடாமல், தியாகத்தோடு நற்கிரியைகளை செய்து வந்தேன். ஆனால் நான் செய்த சிறிய குற்றத்திக்காக என்னை எப்படியாக அவமானப்படுத்தினார்கள்? பலர் முன்னிலையிலே என்னை நிந்தித்தார்களே என்று தன்மனதின் ஆழத்திலிருக்கும் துயரங்களை ஒரு விசுவாசியானவன்தன் மேயப்பனானவரிடம் கூறினான். அதற்கு அந்த மேய்ப்பரான வர் அவனை நோக்கி: மகனே, நீ பட்ட பிரயாசங்களை ஒரளவிற்கு நானும் அறிந்திருக்கின்றேன். என் வாழ்விலும் கூட நீ உற்சாகத்தோடு எனக்கும் என் குடும்பத்தாருக்கும் செய்த நன்மைகளையும் நான் அறிவேன். உன் தியாகமான சேவைகளுக்கு நான் சாட்சியாக இருக்கின்றேன். நன்மை செய்து பாடநுபவிப்பதைக் குறித்த அனுபவம் எனக்கும் உண்டு. ஆனால் நீ கூறிய ஒரு காரியம் எனக்கு புரியவில்லை. நீ கைமாறு கருதாமல் நன்மை செய்தேன் என்று கூறினாய் அல்லவா? அப்படியானால், உன்னிடத்தில் நன்மைகளை பெற்றவர்கள், உனக்கு நன்மை செய்யவில்லை என்று ஏன் நொந்து கொள்கின்றாய் என்று அந்த விசுவாசியிடம் கேட்டார். அதைக்கேட்ட அந்த விசுவாசியானவனின் முகத்திலே ஒரு மலர்ச்சி ஏற்படுவததை அந்த மேய்ப்பரானவர் கண்டார். ஆம், அந்த விசுவாசியானவன், தேவனுடைய வார்த்தையை தியானிக்க ஆரம்பித்தான். பிரியமானவர்களே, நன்மைகள் பல செய்த அந்த விசுவாசியனவன், நன்மைகளை பெற்ற நன்றியற்ற பல மனிதர்களுக்கு சத்துருவானான். “உங்கள்சத்துருக்களைச் சிநேகியுங்கள், நன்மைசெய்யுங்கள், கைம்மாறு கருதாமல் கடன் கொடுங்கள், அப்பொழுது உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்,உன்னதமானவருக்கு நீங்கள் பிள்ளைகளாயிருப்பீர்கள், அவர் நன்றியறியாதவர்களுக்கும் துரோகிகளுக்கும் நன்மைசெய்கிறாரே.” என்று ஆண்டவராகிய இயேசு கூறியிருக்கின்றார். எனவே, கைமாறு கருதாமல் நன்மை செய்தால், அந்த கிரியையின்படி வாழுங்கள். அப்பொழுது பரலோகத்தில் உங்கள் கைமாறு அதிகமதிகமாயிருக்கும். நீங்கள் உன்னதமான தேவனுக்கு வார்த்தையினாலும், கிரியைகளினா லும் பிள்ளைகளாயிருப்பீர்கள்.

**லூக்கா 6:35**

**உன்னதமானவருக்கு நீங்கள் பிள்ளைகளாயிருப்பீர்கள், அவர் நன்றியறியாதவர்களுக்கும் துரோகிகளுக்கும்நன்மை செய்கிறாரே**

**ஜெபம்:** இரக்கமுள்ள பரலோக பிதாவே, நான் சோர்ந்து போகாமலும், இளைப் படையாமலும், நீர் எனக்கு தந்த திவ்விய சுபாவங்களை ஒரு போதும் விட்டுவிடாமலுமிருக்க எனக்கு பெலன் தந்து வழிநடத்திச் செல்வீராகஇரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# காரணமில்லாத காயங்கள்

வாழ்க்கயையில் ஏற்படும் காரணமில்லாத காயங்கள் மனிதர்கள் மனதிலே பல கேள்விகளை ஏற்படுத்துகின்றது. நம்பியிருந்தோர், நட்போடு டிருந்தோர், நன்மைபெற்றோர் நன்மைக்கு தீமை செய்யும் போது, உண் டாகும் மனவேதனை விபரிக்க முடியாதவைகள். "நான் எத்த னையோ நன்மைகளை செய்தேன். ஆனால் அவர்கள் என்னுடைய குடும்பத்தைப் பற்றி காரணமில்லாமல் அவதூறு பேசி த்திரிகின்றார்கள். அத னால் என் வாழ் வின்சமாதானத்தைநான் இழந்து போய் விட்டேன்" என்று ஒரு விசுவாசியான வன்தன் நிலைமையை கூறினான். முத லாவதாக, இந்த உலக வாழ்க்கையில் நமக்கு உபத்திரவங்கள் உண்டு என் பதை நாம் நன்கு அறிந்து கொள்ள வேண்டும். அந்த உபத்திரவங்கள் யார் வழியாக வரலாம்? அது எந்த மனிதன் வழியாகவும் வரலாம் என்பதையும் நாம் அறிந்திருக்க வேண்டும். இரண் டாவதாக அவைகளினால் நான் இழந்து போன மனசமாதானத்தை எப் படி பெற்றுக் கொள்ள முடியும்? மனதிலே ஒட்டியிருக்கும் பகை, வன் மம், கசப்பு இவை யாவும் ஒன்றோடொன்று ஐக்கியப்பட்டிருக்கின்றது. அவை யாவற்றையும் நான் என் மனதைவிட்டு அகற்றிவிட வேண்டும். அதை எப்படிச் செய்வது? தேவனுடைய வார்த்தை உங்களில் கிரியை செய்ய இடங்கொடுங்கள். உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியு ங்கள் உங்களை நிந்திக்கிறவர்களுக்காக ஜெபம்பண்ணுங்கள் (லூக்கா 6:28). ஒருவேளை உங்களை காரணமின்றி சபித்தவர்கள், நிந்தித்தவ ர்கள், அநியாயம் செய்தவர்கள் இன்னும் மனந்திரும்பாமல் இருக்க லாம். உங்களிடம் மன்னிப்பை கேட்க மனதில்லாமல் இருக்கலாம் அல் லது இன்னும் அநியாயம் செய்து கொண்டே இருக்கலாம். நீங்களோ, அவற்றைப் பொருட்படுத்தாமல் ஆண்டவர் இயேசு கூறிய சமாதான மான தேவ பிள்ளையின் வாழ்க்கை முறையின்படி, உங்கள் மனதிலே அவர்களை ஆசீர்வதியுங்கள். அவர்கள் தங்கள் அநியாயத்திலே அழி ந்து போகாமல், மனந்திரும்பி நித்தியஜீவனை அடைய வேண்டும் என்று அவர்களுக்காக வேண்டுதல் செய்யுங்கள். நீங்கள் தனித்து விடப்படவி ல்லை. தேவ ஆவியானவர்தாமே உங்களோடிருந்து, சத்திய வழியைக் காட்டி, அந்த வழியிலே நடப்பதற்கு உங்களுக்கு ஆலோசனை கூறி, உங்களுக்கு பெலன் தந்து வழிநடத்திச் செல்வார்.

**லூக்கா 6:28**

**உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்களுக்காக ஜெபம்பண்ணுங்கள்**

**ஜெபம்**: என் பாவங்களை மன்னித்து உம்முடைய பிள்ளையாக என்னை அணைத்துக் கொண்ட பரம பிதாவே, நீர் எனக்கு பாராட்டின கிருபையை நான் மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ள உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# ஆரோக்கியம் தரும் அருமருந்து

ஒரு மனிதனானவனுடைய காலில் வளர்ந்து வரும் ஒரு கட்டியினால், மிகவும் வேதனைப்பட்டுக் கொண்டிருந்தான். நோவை ஆற்றும் படிக்கு வைத்தியரொருவரை காணும்படியாக சென்றான். மிகவும் வேதனை யோடு இருந்த அந்த மனிதனாவனை கண்ட வைத்தியர்: உடனடியாக சத்திர சிகிச்யை செய்து, அந்தக் கட்டியை அகற்ற வேண்டும் என்றார். அதற்கு அவன் வைத்தியரை நோக்கி: ஐயா, சிகிச்சை ஒருபக்கம் இருக்க ட்டும். வலி மிகவும் அதிகமாயிருக் கின்றது. வலியை குறைப்பதற்கு ஏதவாது செய்யுங்கள் என்றான். அதற்கு வைத்தியரானவர்: உன்னு டைய வலியை தற்காலிகமாக குறை ப்பதற்கு மாத்திரைகள் உண்டு. ஆனால் அதிகாலேயே நீ வாழ முடி யாது. அவை உன் நோவை கொஞ்சம் தணித்து, உன் சரீரத்திலே வேற பக்கவிளைவுகளை உண்டு பண்ணும். சிகிச்சை செய்தால், உனக்கு ஏற்பட்டிருக்கும் வலி சில நாட்களுக்குள் முற்றாக இல்லாமல் போய்வி டும், நீ ஆரோக்கியமாக உயிர் வாழ்விற்கு அது இன்றியமையாதது என்றார். ஆனால், அவனோ, வலியை குறை க்கும் மாத்திரையில் கொஞ்சக் காலம் இருந்துவிட்டால் நல்லது என்ற சிந்தையுடைய வனா கவே இருந்தான். ஆம், பிரியமானவர்களே, இன்று பல விசுவாசி களுடைய வாழ்க்கையிலே மனப்புண்கள் ஆற்றப்படாமல் இருக்கின்றது. காரணம் என்ன? அவர்கள் அந்த புண்கள் ஆற்றப்படக்கூடாது என்று வாழ்கின்றார்களா? இல்லை. அவை ஆற்றப்படும்படி விரும்புகின் றார்கள். ஆனால், அவை ஆற்றபடுவதற்கு வேண்டிய காயம் கட்டு தலை அல்லது மருந்துகளை எடுத்துக் கொள்ள அவர்க ளுக்கு விருப்ப மில்லை. கடலிலே செல்லும் கப்பலிலே அலைகள் மோதுவது போல, நம்முடைய விசுவாசக் கப்பலிலும், தென்றல் மாத்தி ரமல்ல, புயல்க ாற்றுக்களும் மோதுகின்ற நாட்கள் உண்டு. நன்மைக்கு தீமை செய்யும் மனிதர்களை வாழ்விலே சந்திக்கின்றோம். சில வேளை களிலே அப்படிப்பட்டவர்கள் சக விசுவாசிகளாகவும் இருக்கலாம். நம்பிக்கைத் துரோகங்களினால், மனவேதனைகள் உண்டாகிவிடுகி ன்றது. அதிலி ருந்து குணப்படும்படி, அருமருந்தாக இருக்கும் தேவ ஆலோசனை களுக்கு நம்மை ஒப்புக் கொடுக்க வேண்டும். மாட்டோம் என்று விட்டுவிடுவோமானால், ஆரோக்கியமான சுக வாழ்வை நாம் தள்ளிப் போடுகின்றவர்களாக காணப்படுவோம்.

**ரோமர் 12:14**

**உங்களைத் துன்பப்படுத்து கிறவர்களை ஆசீர்வதியுங் கள்; ஆசீர்வதிக்கவேண்டிய தேயன்றி சபியாதிருங்கள்.**

**ஜெபம்:** ஆறாத காயங்களை ஆற்ற வல்ல தேவனே, மனப்புண்களை ஆற்றும் அருமருந்தாகிய உம் வார்த்தையை நான் உட்கொள்கின்றவனாக வாழும்படி என்னை நீர் வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.